தனிப்பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M. 3066 1935-அக்டோபர்-1
PAHUTHARIVU ("REASON")

(இதழ் 6)

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜுலை மாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக்குறிப்பிடவேண்டும்

விஷய அட்டவணை. பக்கம்.

பரிதாபம் பாட்டு (சாமி. சிதம்பரனார்)	1
கடவுளின் தோற்றம் (பச்சையப்பன்)	4
வணக்கம்— அடிமை (சாமி. சிதம்பரனார்)	9
ஜோசியமும், சகுனமும்	13
குழந்தை வளர்ப்பு (தோழர் S. குஞ்சிதம் குருசாமி B. A., L. T.,)	20
மாந்திரீகப் பெண் (ஜே. பி. கிருஷ்ணன்)	23
நாஸ்தீகன் நன்னெறி அற்றவனா (டாக்டர் வேல்ஸ்)	29
வருங்கால்ச் சந்ததியார்கள்	38
சமயமும், விவாகமும்	43
வெள்ளை ருஷியா	44
சிகப்பு ருஷியா	52
விதண்டாவாதம்	58
முதலில் புரோகிதம் ஒழியவேண்டும் ...	60
மதங்களின் சக்தி	63
திதி	64

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

—————)o(—————

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 அக்டோபர் 1. { இதழ் 6.

பரிதாபம்!

(சாமி. சிதம்பரனார்.)

நொண்டிச்சிந்து.

1. என்னென் றுரைத்திடுவோம்—இங்கே
இழிவுறும் மனிதர்கள் நிலை தனையே!
உன்னற்கும் அறிதாகும்;—அவர்கள்
உள்ளத்தில் பொருள்களின் உண்மை உணரார்
முன்னோர் மொழிந்தவைகள்—எல்லாம்
உண்மையென எண்ணிமதி கெட்டிடுவார்
பின்னோர் மொழியெல்லாம்—சுத்த
பிழையென்று மனதினில் நினைந்திடுவார் [என்னென்]

2. அறிவைத் துணைகொள்ளார்—அதனால்
அவதிகள் கெடநலம் பெறமாட்டார்;
பெரியோர் செயல்என்றும்—அவர்கள்
பேசிவைத்த உயர்மொழி இவையென்றும்

வறியோர் ஆவதற்கே - பற்பல
வழிகளில் செல்வத்தை நாசஞ்செய்வார்;
அறிவற்ற தெய்வீகம்—என்னும்
அபத்த மொழியிவை அடிப்படையாம். [என்னென்]

3. கொஞ்சமோ துன்பங்கள்—இந்தக்
குருட்டுத் தெய்வீகம் கொடுப்பனவே?
அஞ்சி அஞ்சிக்குலைவார்—புத்தி
அற்ற தன்மை யால்பேய் பூதஞ்சொல்வார்
வஞ்சக மாந்திரிகர்—நன்மை
வரும்எனப் பொய் சொல்லும் சோதிடர்கள்
பஞ்சைகள் நாமெனவே—கண்டு
பலபொருள் நம்மிடம் பறித்துக்கொள்வார் [என்னென்]

4. மண்ணிலும் தெய்வம்என்பார்;—வளர்ந்த
மரங்களில் தெய்வங்கள் வாழும்என்பார்;
பொன்னிலும் தெய்வம்என்பார்; —பெரிய
புதர் மலை சோலையில் தெய்வம் என்பார்;
தண்ணீர் தெய்வம்என்பார்;—ஒளியைத்
தருகதிர் மதிதீ தெய்வம் என்பார்;
கண்ணில் தெரிபொருள்கள்—எல்லாம்
கனதெய்வம் என்றெண்ணிக் கருத்தழிவார் [என்னென்]

5. பத்தி என்று சொல்லியே—மக்கள்
பகுத்தறி விழந்திங்கு மூடர்ஆனார்;
சத்தி முழுதிழந்தார்;—குருட்டுச்
சாத்திரங்கள் சொல்லும்பொய் வார்த்தைநம்பி
நித்தியம் தெய்வமென்றே—மனதில்
நினைந்ததைப் பணிகின்ற குணமுள்ளோர்
புத்தியில் அதன் உண்மை—எப்படிப்
புலப்படும்? விடைகண்டு புகன்றிடுவீர்! [என்னென்]

6. மக்கள் முயற்சியினால்—இந்த
மாநிலத்தில் ஆவதொன்றும் இல்லையென்றே
துக்கமே கொண்டிருப்பார்;—அறிவின்
துணையைக் கொண்டின்புறும் வழியறியார்;
தொக்கதோர்போராண்மை—ஒன்றே
தொலைத்திடும் துயரத்தை என்றுணரார்;
மிக்கவேபெருக்கம்—பெற்றே
மேல்நிலம் வளர்வுறும் நிலையறியார் [என்னென்]

7. குந்தவும் குடில் இன்றி—வயிற்றின்
குறைவற உண்ணற்கும் உணவின்றி
கந்தைத் துணியுடனே—தினமும்
களைத்திடப் பணிசெய்து கவலையினால்
நொந்தே மனங்குன்றி—என்றும்
நோயுடன் போர் செய்து வாழ்ந்திருப்பார்;
அந்தோ பரிதபம்!—இவர்கள்
ஆண்மையர் ஆயிடில் துயரும் உண்டோ? [என்னென்]

8. செல்வரின் கீழடங்கி—அவர்கள்
சிறுவர் என்றஞ்சிப் பணி செய்வார்
பல்லைக் காட்டிநிற்பார்;—தங்கள்
பணங்களைக் கொள்ளைகொள் பரதேசி
சொல்லைத் தாளமோடும்—இனிய
சுதியுடன் கூட்டியே நடஞ்செய்வார்;
மல்லுக்குறவேண்டாம்—என்றே
மனிதர்தம் சுதந்தரம் பறிகொடுப்பார் [என்னென்]

9. காலிகள் என்று சொன்னால்—இவர்கள்
கணக்கற்ற பயங்கொண்டு கலங்கிடுவார்;
வேலைகள் செய்தறியா—வறிய
வீணருக் குழைத்துடல் சோர்வடைவார்;
பாலென மொழிபேசும்—உயர்ந்த
பாவையர் தமையடிப் படுத்திடுவார்;
சீலம் என்பதுதான்—இங்கே
சிறியரை வலியர்கள் ஆளுவதோ? [என்னென்]

10. அந்தோ! பரிதாபம்!—மாந்தர்
அறிவற்ற செயல்களை நினைத்துவிட்டால்;
சந்தோஷமும்இல்லார்—பயனில்
சடங்குகள் தமில்பொருள் பாழ் செய்வார்;
நொந்தே வாழுமக்கள் வறுமை
நோய்தனை நீக்கிட வழியறியார்;
முந்தி வரும் பழக்கம்—என்னும்
மூடமதி யால்உண்மை அறிந்துகொள்ளார் [என்னென்]

———)o(———

கடவுளின் தோற்றம்.

(பச்சையப்பன்.)

ஆங்கிலத்தில் G. ஆலன் என்பார் எழுதியதன் மொழிபெயர்ப்பு.

மிகப்பழைய காலத்தில் அதாவது இறந்தாரின் உடல்கள் அப்படியே போற்றப்பட்டு (Preserved) வந்த காலத்தில், கடவுள் என்றால் என்ன என்பது தெரியாமலிருந்தது. அக்காலத்தில் சிநேகிதர்களதும், உறவினர்களதும் ஆன சவங்களையேதான் வணங்கி வந்தனர். உதாரணமாக எல்லிஸ் (Ellis) என்பார் கூறுவதை எடுத்துக் கொள்ளுவோம். "தாவீதியன் தலைவன் ஒருவனின் உடலை உட்காரும் நிலையில் (Sitting posture) அமைத்து அதை ஒரு காப்பான குடிசையில் வைத்தார்கள். அதன் முன் ஒரு சிறு பலிபீடம் வைக்கப்பட்டது. பழம் ஆகாரம் பூ முதலான நிவேதனங்கள் ஒவ்வொரு நாளும் அதன் முன் அத்தலைவனது உறவினர்களாலோ அல்லது ஒரு புரோஹிதனாலோ படைக்கப்பட்டன.

மத்திய அமெரிக்கர்கள் இதுபோன்ற சடங்குகளை (Rites) செயற்கை உஷ்ணத்தால் உலர்த்தப்பட்ட உடலின் முன் செய்வதாக ஸ்பென்ஸர் கூறுகிறார்.

டி அல்பர்டிஸ் (D' Albertis,) நியூகினி ஜனங்கள் தங்கள் தந்தையர்களதும், கணவனதும் ஆன சவங்களை உலர்த்தி அதை வணங்கி வந்தனர் என்று கூறுகிறார். இதைவிட சற்று உயர்ந்த முறையில் எகிப்தியர்களும் பெரு ஜனங்களும் சவங்களைப் பக்குவம் செய்து வணங்கி வந்தனர் என்பது நாம் அறிந்ததே. இவைகள் சக்தி வாய்ந்த அரசர்களினதும், தலைவர்களினதும் (Chieftains) ஆனவை. இப்படி எங்கெங்கு சவங்களை வணங்கும் கொள்கை இருந்து வந்ததோ, அங்கெல்லாம், அவைகளுக்குப் படையல் (Offerings) படைக்கப்பட்டு வந்தன.

இப்படி உடல் முழுவதையும் பாதுகாத்து வணங்கி வந்ததும் அல்லாமல் தலை மட்டும் தனியாக எடுக்கப்பட்டு வணங்

கப்பட்டும் வந்தது. இதைப்பற்றி H. O. போர்ப்ஸ் கூறுவதாவது:— "(புரு) (Buru) ஜனங்களால் காட்டில் பிரத்தியேகமான இடத்தில் இறந்தாரின் சவங்கள் புதைக்கப்படுகின்றன. இதன் மேல் சமாதிக் கல்லை வைக்கிறார்கள், இங்கு குறிப்பிட்ட நாட்களில் இறந்தாரின் சொந்தக்காரன் புகையிலை, சுருட்டு முதலியன படைக்கிறான். உடல் மக்கிப் போன பிறகு (Decomposed) குமாரன் அல்லது நெருங்கிய சொந்தக்காரன் அதன் தலையை எடுத்து, புதுத்துணியில் அதை மூடி புதைத்தவிடத்திற்கு அருகில் ஒரு சிறு குடிசை கட்டி, அதில் அத்தலையை வைக்கிறான். இது அவனது மூதாதையின் பிரதிநிதி இதை அவன் மிக பயபக்தியுடன் கொண்டாடுகிறான்."

இங்கு கவனிக்கத் தக்கன இரண்டுண்டு. ஒன்று சவக்கல் (Grave stake) மாவிக்ரஹத்துக்கு மூலகாரணமாக இருக்கலாம். இரண்டாவது, ஒரு சிறு குடிசை (சமாதிக்கு மேலோ, அருகிலோ) அமைப்பது. இது கோயில் உண்டானதற்குண்டான காரணங்களில் ஒன்றென்பதில் சந்தேகமில்லை என்று சொல்லலாம். இங்கு தலைக்கு துணிமூடுவது முதலியனவும் படைத்தல் முதலியனவும் கவனிக்க வேண்டும்.

வியாட்ஜில் என்ற பேர் பெற்ற, மிஷனரி பொயராவில் ஒரு இறந்த குழந்தையைப்பற்றி பின் வருமாறு கூறுகிறார். "அது இரண்டங்குல மண்ணால் மூடப்படும். நண்பர்கள் அதைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். அதன் தலையோடும் (Skull) சிறு எலும்புகளும் பாதுகாக்கப்பட்டு தாயாரால் அணிந்துக் கொள்ளப்படும்." சுவாவு (Suau) ஜனங்களைப் பற்றி அவர் கூறுவதாவது:— "சிறு குடிசைகள் எதற்காக என்று கேட்டதில், அவைகள் சமாதியை மூடுவதற்காக என்றனர். ஒரு குடும்பத்தின் எல்லா அங்கத்தினர்களும் அதே சமாதியில் தான் வைக்கப்படுகின்றனர். கை மடக்கப்பட்டு உட்காரும் நிலையில் அவைகள் (சவங்கள்) அமைக்கப்படுகின்றன. முகம் வரையில் மண்ணால் மூடுகிறார்கள். ஒரு மண் பாண்டத்தைக் கொண்டு தலையை மூடுகிறார்கள். சில காலத்திற்குப் பிறகு பானை எடுக்கப்படுகிறது மண்டை ஓடு அதனின்றும் எடுக்கப்பட்டு இறந்தார் வீட்டில் சுத்தம் செய்து வைக்கப்படுகிறது." அமெரிக்காவில் இதற்குச் சான்றாக, புதுமாட்ரிட் என்னுமிடத்தில் மண்பானைகளால் மூடப்பட்ட மண்டை ஓடுகள் காணப்பட்டன. அவ்வோட்டை பானையை உடைத்துதான் எடுக்க வேண்டுமாம்.

நியூகினியிலும், மலாய் அர்ச்சிபில கோவிலும் இப்படித் தனித்தலைகளைக் காத்து வணங்குவதைப்போல் இன்னும் வேறு பல பழங்கால (Primitive) ஜனங்களால் வணங்கப்படு தல் காணப்படுகின்றன. இதுபற்றி ஸ்பென்ஸர் பல உதார ணங்கள் கூறுகிறார். அவைகளில் சில கீழ்வருமாறு.

"படக்ரி (Badgri)யில் அரசர் அடோலி தன் குடிசை ஒன் றில் தந்தையின் தலை ஓடு ஒரு களிமண் பாத்திரத்தில் தரை யில் வைக்கப்பட்டிருக்கிறது" "தான் எண்ணிய வெற்றியை அடையாவிட்டால் அவன் அதைக் கோபிக்கிறான்"

"மந்தானியர்கள் இறந்தாரின் மண்டை ஓடுகளை ஒரு வட்டமாக வைத்து, அதனிடம் அதன் தாயோ, மனைவியோ அன்புடன் காத்து வருகிறார்கள். அதைக்காணாமல் அரை நிமிஷமும் காலங்கழிப்பதில்லை. அதற்கு தினந்தோறும் நல்ல ஆகாரம் படைக்கிறார்கள். அதனுடன் ஏதோ அவர் கள் பாஷையில் பேசி களிக்கின்றனர்"

இவர்கள் சவங்களைக்கண்டு பயப்படுவதில்லை. முழு சவமும் பயங்கரத்தைக் கொடுப்பதாகவும் அருவருக்கத்தகுந் ததாகவும் காணப்படுவதால் தலையை மட்டும் போற்றுகிறார் கள் என்றும் சொல்லலாம்.

இதைவிட சற்று 'நாகரிக' முறையில் நடைபெற்ற சில வற்றை தூசில்லூ என்பார் குறிப்பிடுகிறார். அது "(அவரது மேற்காப்பிரிக்க, ஜனங்கள்)" ஒரு பிரயாணத்தின் மேல் செல் லும்பொழுது அவர்களுடைய மூதாதைகளின் மண்டை ஓடுக ளைக் கொணர்ந்தார்கள். அதை அவர்கள் மிக பயபக்தி யுடன் வணங்கினர். அந்த எலும்பில் சிறிது சுரண்டி தண் ணீரிலிட்டுக் குடித்தார்கள். அதற்குக் காரணம், அவர்களது மூதாதையர் தைரியசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் எலும்பை உட்கொள்ளுவதால் அவர்களும் தைரியசாலிகளாக வும், வலிமையுற்றவர்களாகவும் பயமற்றவர்களாவும் ஆகிவிடு வர்கள் என்று கூறுகிறார்கள்." என்பதாம். இம்மாதிரி 'கட வுளைத் தின்னல்' என்பதைப் பற்றி 'பிரேசர்' என்பாரும் குறிப்பிடுகிறார்.

இப்படி பழங்கால ஜனங்கள் மூதாதையர் அதாவது இறந்த சொந்தக்காரர்களை வணங்குவது ஒன்றுக்கொன்று கலப்பற்றதாக விளங்குகிறது. இன்றும் சைனாவிலும், மற்

றும் வேறு சில இடங்களிலும் இம்மாதிரி இறந்தாரை வணங்கும் வழக்கம், மத சம்பந்தமுடையதாக இருக்கிறது. பின்னால் அநேகமான மதக்கோட்பாடுகள் எழுந்த பின்னும், கூட இந்த இறந்தாரை வணங்கல் என்னும் கொள்கை பல்வேறு ஜனங்களிடையிருக்கின்றன. இந்த கொள்கை கிரீஸிலும், ரோமிலும் கடைசி வரையில் முக்கியமானதாக இருந்து வந்திருக்கிறது. (ஹிந்து மதத்தில் இன்றும் வந்துக் கொண்டிருக்கிறது.) ஆனால் இறந்தவர்களிடையே பல சந்தர்ப்பங்களில் படிப்படியான வித்தியாசங்கள கற்பிக்கப்பட்டன சில ஆவிகள் (Ghosts) மற்றவைகளைவிட அதிகமான முக்கியஸ்தானம் வகித்தன. இந்த கடைசி வருஷந்தான் கடவுள்களாக உருவகிக்கப் பட்டன

ஆரம்பகாலத்தில், இதன்படி கடவுள் என்பதன் பொருள் என்னவாயிருந்திருக்கவேண்டுமென்றால், அது இதுவாகத் தானிருக்கவேண்டும்: கடவுள் பெரிய வலிமையுடையதும், உதவி செய்யக்கூடியதும் (அந்த உதவியால் அநேகமான சாதகங்களை அடையக்கூடும்) ஆன ஒரு ஆவி.

தலைமை என்பதும், அரசு என்பதும் தோன்றியது கடவுள் என்பதற்கு அதிகப்படியான பொருளைத் தருகிறது. ஒரு வலிமை மிக்க அரசன் அல்லது தலைவன் இறந்த பிறகு காலா காலத்தில் ஒரு முக்கிய கடவுளாகிவிடுகிறான். இதன்படி கடவுளின் வலிமை, தலைவன், அல்லது அரசன் அல்லது சக்கரவர்த்தியின் வலிமையைப் பொருத்ததாய் நின்றது.

இப்படி உடல் பாதுகாத்தல் (Corps preservation) உடல் பதனிடல் (Mummification) என்ற முதற் பகுதியிலிருந்து அப்படியே புதைக்கும் (Burial) பழக்கத்தை கவனிக்கலாம். இறந்த உயிர் திரும்பி உயிருடன் வந்து ஜனங்களுக்குக் கெடுதி செய்யக்கூடும் என்ற சந்தேகம் உடலைப் புதைக்கவும், எரிக்கவும் தூண்டியது. ஆனால் அப்படிச் செய்தபின்னும் அவர்களை வணங்குவதைக் காண்கிறோம். அந்த பயத்தின் காரணமாக புதைத்தபின் அதன் மேல் அது எழுந்திருக்கவொட்டாமல் புதைத்தவிடத்தின் மேல் கல்லை வைக்கிறார்கள். இந்தக் கல்லும் காலா காலத்தில் மாறி விக்ரஹங்களாகவோ, பலிபீடங்களாகவோ ஆய்விடுகிறது.

இப்படி மனிதனின் அறிவு வளர வளர கடவுள் என்ற சொல்லின் பொருள் திட்டமான பொருளுக்கு நெருங்குவது

போல் தோன்றுகிறது. கோயில்கள் கட்டுவதென்ற கொள்கைகள் அதிகமாக அதிகமாக கடவுள்களும் அதிகமாகின்றன. உருவில்லா ஆவி பெருங் கடவுள் என்பதை ஸ்திரப்படுத்துகிறது. கடவுள்கள் என்பவைகள் கண்ணால் காண முடியாததாக ஆகிவிடுகிறது. அவைகளுக்குப் பல திறமைகள் கற்பிக்கப்படுகின்றன. சில சமயங்களில் அவைகளே சூரியனாகவும் சந்திரனாகவும் ஆய்விடுகின்றன! அவைகள் சர்வ சக்தியுடையனவாக சொல்லப்படுவதாகக் கூறப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தை அல்ல. சக்தியைப் பெற்றிருப்பதாகக் கற்பிக்கப்படுகின்றன.

கிரேக்க ரோமானிய நாகரிக காலத்திலும் இப்படித்தான் கொண்டாடப்பட்டன. இவைகளெல்லாம் கடவுள் என்பதொன்றே யொன்று என்று சொல்லும் ஒரு கடவுள் கொள்கை (Monotheism.) பிறந்த பின் க்ஷீணநிலைக்கு வந்து விட்டது. ஒரு குறிப்பிட்ட வீட்டின் முதல்வன் இறந்த பின் அவ்வீட்டின் கடவுளாக அவன் ஆய்விடுகிறான். ஒரு தேசத்தின் அரசன் இறந்தபின், அவன் அத்தேசத்தின் கடவுளாக அமைகிறான். இந்தக் கொள்கை கடவுளின் சக்தியை அதிகரிக்கச் செய்ததாக மேல் கூறப்பட்டது. அரசனை வணங்குவது கடவுளை வணங்குவதற்குத் தூண்டியது. உயிருடன்வாழும் ஒரு அரசன் மிகவும் வலிமையுடையவனாய் இருந்தால் அப்படிப்பட்டவனே வணங்கும் தெய்வம் அவனுடைய மூதாதை எவ்வளவு வலிமை பெற்றிருக்க வேண்டும்! இப்படி அதற்கு மேல் அது, அதற்கு மேல் அது என்று பெருக்கிக் கொண்டே போனால் முதல் தெய்வம் அல்லது அறிவுக்கெட்டிய வரையில் தெரியக்கிடக்கும் கடவுள் மற்றவைகளைக் காட்டிலும் சக்தி பெற்றதாகிறது. இந்தக் கடவுளைத்தான் ஒருவன் தன் சந்ததியாருக்குச் சொல்லுகிறான். ஆனால் அந்தக் கடவுளைத் தனது இஷ்டத்திற்குத் தக்கபடி திருத்தியும் புதுக்கியும் அழகுறச் செய்து விடுகிறான். இம்மாதிரியான வழக்கம் (இறந்தாரைத் தெய்வமாக்குதலும், புதுக்குதலும்) இந்து மதத்தில் இன்றும் ஏராளமாக இருக்கிறது இதைப்பற்றி விவரித்தெழுதினால் ஒரு பெரிய புத்தகமாகும். இனி கோவில்களின் தோற்றத்தைப்பற்றி ஆராய்வோம்.

———)o(———

வணக்கம்—அடிமை.

[சாமி. சிதம்பரனார்.]

உயர்வு தாழ்வு எங்கும் நிலைத்திருக்கின்றது; தமக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் பெற்றிருப்பவர்கள் உயர்ந்தவர்கள்; அல்லது பெற்றுக்கொள்ளும் சக்தி படைத்தவர்கள் உயர்ந்தவர்கள்; தமக்கு வேண்டியவைகளைப் பெறாமல் வருந்தியிருப்பவர்கள் தாழ்ந்தவர்கள்; அல்லது பெறச் சக்தியில்லாமல் இருப்பவர்கள் தாழ்ந்தவர்கள். இப்பொழுது உயர்வு தாழ்வுக்குக் காரணம் இவைதான்.

இப்படிப்பட்ட தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்களின தயவை எதிர்பார்ப்பது இயற்கை' அவரால் தமக்கு வேண்டிய நன்மைகளைப் பெற விரும்புவது உலகில் நிகழும் காட்சி.

ஒருவர் மற்றொருவரிடமிருந்து உதவியை எதிர்பார்க்கும் போது அவருக்கு இவர் பணிந்து நிற்கவேண்டியவராகிறார். பணிவின்றேல் காரியம் கைகூடுவதில்லை. ஆதலால் இதன் மூலம் வணக்கம் ஏற்பட்டுவிடுகிறது. வணக்கம என்பதற்குக் கீழ்ப்படிதல் என்றே வைத்துக்கொள்வோம்; அதுவே பணிதல் ஆகும்.

பெரும்பாலும உதவி பெறக்கூடியவர்கள் தாம் பெறும் உதவியை மாத்திரம் நினைக்கின்றனர் உதவி செய்பவருக்குத் தன்னால் ஏற்படும் நனமைகளைக் கணக்கிடுவதில்லை. உதவி செய்பவர்களுக்காக உழைப்பது—வேலை செய்வது தமது கடமை என்று கருதுகின்றனர்; அதற்காக—வேலை செய்வதற்குப் பலனாக அவர்கள் கொடுக்கும் கூலியை உதவி என்று கருதுகின்றனர்; இக்காலத்தில் எல்லோரும் இப்படிக் கருதாவிட்டாலும் பண்டை காலத்தில் எல்லோரும் இப்படியே எண்ணிவந்தனர். இதுவே உழைப்பாளர்கள் தாழ்ந்தவர்கள் ஆனதற்குக் காரணம்; உழைப்பற்றவர்கள், உயர்ந்தவர்கள் ஆனதற்குக் காரணம.

இக்காரணத்தால் உயர்ந்தவர்களுக்குத் தாழ்ந்தவர்கள் வணங்குதல், கீழ்ப்படிதல் என்றும் வழக்கம் உண்டாயிற்று.

இது அடிமை மனப்பான்மையையும் உண்டாக்கி விட்டது; வணக்கமென்பது அடிமை மனப்பான்மை என்னும் விதை யிலிருந்து முளைத்தெழுந்த பயிரேயாகும். தலைவன், அடி மை என்று ஏற்பட்டதற்கும் இதுவே காரணம்.

அடிமை என்பவன் தன் தலைவனை உயிருள்ளபோது தன்னைக் காப்பாற்றுகிறவனாக நினைத்து வணங்குவது போ லவே அவன் இறந்த பின்னும் அவன் "நன்றியை" நினைக் கின்றான்; நினைத்ததும் அவனுக்கு வணக்கம் செலுத்துகின் றான். உயிருள்ளவன் வணங்கிய பழக்கம், செலுத்த பின்னும் அவனை வணங்கும் வழக்கத்தையும் உண்டாக்கி விட்டது. இது தனிப்பட்ட மனிதனை மாத்திரம் பொறுத்த விஷயம் அல்ல; ஜனசமூகமும் இப்படி தான் நடந்து கொள்ளுகிறது.

உதாரணமாகப் பார்ப்போம்; ஒரு அரசன், அல்லது ஒரு வீரன், அல்லது ஒரு மதத்தலைவன், அல்லது தேசோபகாரி இவர்களை எடுத்துக்கொள்ளுவோம். இவர்கள் உலகத்திற்கு, ஜனசமூகத்திற்கு நன்மை செய்பவர்களாகக் கருதப்பட்டு வந் தார்கள்; இன்றும் கருதப்படுகிறார்கள். இவர்கள் உயிருடன் இருக்கும்போதும் இவர்களிடம் நம்பிக்கை கொண்ட மக்கள் வணக்கம் செலுத்துகின்றனர். இந்த மக்கள் இவர்கள் மாண்ட பின்னும் இவர்களுக்காக ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தி அவைகளை பாராட்டுகின்றனர்; வணங்குகின்றனர். இதனால் இறந்தவர்களை வணங்கும் வழக்கம் நிலைபெற்று விடுகிறது. இது இல்லாததை வணங்குவதாகும்; சூன்யத்தை வணங்குவ தாகும்; உயிருள்ளவர்களை வணங்குவதனால், வேலைக்குக் கூலியாவது கிடைக்கும்; இறந்தவர்கள் பெயரை நினைத்து வணங்கினால் என்ன கிடைக்கும்? ஒன்றுமில்லை. காலக்கே டும், பொருட்செலவும், புத்தி மழுக்கமும் தவிர வேறு ஒரு பலனும் இல்லை.

இந்த வழக்கமும் "தெய்வம்" என்பது பிறந்ததற்கு ஒரு காரணம் என்று கூறலாம். மக்களுடைய புத்தியின் பலவீனத் தையும், பயத்தையும் அறிந்த சுயநல வாதிகள் தெய்வத்தை யும், மதத்தையும் கற்பித்தனர். "கடவுள் ஒருவராலும் காண முடியாதது; எவருடைய மனதுக்கும், வாக்குக்கும், கண்ணுக் கும அகப்படாதது. அதை வணங்கினால் இறந்த பின்னர் அவர்றை இன்பங்களைப் பெறலாம்; இவ்வுலகில் உயிர்வாழும் பொழுதும் எண்ணிய எண்ணமெல்லாம் கைகூடும்." என்று கற்பித்தனர். இக் கற்பனையில் வணங்கும் மனப்பான்மை

படைத்த மக்கள் மயங்கினர்; ஏற்றுக்கொண்டனர். வணக்கஞ் செய்ய ஆரம்பித்தனர். உயிருள்ள மனிதரை வணங்கிய வழக்கம் செத்தவர்களையும் வணங்குவதாக மாறி, கடைசியில் அது தெய்வ கற்பனையில் மதத்தில் நம்பிக்கையையும் உண்டாக்கி விட்டது.

இந்த நம்பிக்கையும், செத்தவர்களை வணக்கமும் செய்த வேலையே, இன்று வானுயர்ந்த கோபுரங்களையுடைய பல மதக்கோயில்கள் தோன்றி நிற்பதற்குக் காரணமாகும். புத்தர் எக்கொள்கையுடையவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் கடவுள் நம்பிக்கையற்றவர். அவருடைய கொள்கையில் விக்கிரக ஆராதனைக்கே இடமில்லை. ஆனால் அந்தப் புத்தரையே தெய்வமாகப் பூசிக்கின்றனர்; ஏசுகிறிஸ்துவின் கொள்கையில் விக்கிரக ஆராதனைக்கு இடமில்லை; ஆனால் அவரையே சிலையாகவும், படமாகவும் வைத்து வணங்குகின்றன; ரஷியாவில் நாஸ்திகத்தைப் பரப்பிய லெனினையும், அவர்கள் ஒரு தெய்வம் போலவே, அவதார புருஷன் போலவே கருதுகின்றனர்.

இம்மாதிரி, மனிதர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்கு பிரியமானவர்களை—தங்கள் அறிவு, சக்தி முதலியவைகளுக்கு மேற்பட்ட அறிவு சக்தியுடையவர்களை உயர்வாகப் பாராட்டுவதும் அவர்களை வணங்குவதும் இன்றும் நிகழ்கின்றது.

ஆகவே நன்றியறிதல்—அதாவது பிறர் செய்த நன்றி மறவாமலிருத்தல் என்பது மக்கள் சமூகத்தில் நிலைத்திருக்கும் வரையிலும் "வணங்குதல்" என்னும் செய்கை மக்கட் சமூகத்தைவிட்டு நீங்கவே நீங்காது. "வணங்குதல்" என்பது இருக்கும் வரையிலும், அடிமை மனப்பான்மை நீங்காதவரையில் விக்கிரக, ஆராதனைகள் மறையாதவரையில மதங்களும், மதச்சடங்குகளும் ஒழியாது. மதமும் மதச்சடங்குகளும் ஒழியாதவரையில் ஜனசமூகத்தில் ஒற்றுமையும், சமாதானமும் நிலவமுடியாது. ஜன சமூகத்தில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவாதவரையில் மனிதர்கள் அனைவரும் இன்பமுற்று வாழமுடியாது.

ஆனால் நன்றி மறவாமை என்னும் குணம் மக்களிடமிருந்து அகன்றுவிட்டால், எல்லோரும் ஒழுக்கங்கெட்டவர்

களாகிவிடுவார்கள் என்று கூறலாம். ஆம்; "நன்றி மறவாமை" என்னும் குணம் நீங்கும் அளவில் மாத்திரம் நின்றுவிடுதல் போதாது. அந்த அளவோடு நின்றுவிட்டால் ஒழுக்கங் கெட்டவர்களாக ஆகிவிடுவார்கள்தான். மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறர் செய்த நன்றியை நினைத்து அவரை வழிபடுவதற்குப் பதிலாக பிறருக்கு நன்மை செய்தலே மனிதனாகப் பிறந்தவனுடைய கடமை என்று கருதவேண்டும்; தானும் மக்களுடைய நன்மைக்காக உழைக்க வேண்டும் என்னும் இக்கொள்கை மனிதர்களின் மனத்தில் வேரூன்றுமானால் "வணங்குதல்" தன்மை ஒழியும் அது ஒழியவே அதன்மூலம் கிளைத்தெழுந்து பரவியிருக்கும் எல்லாக் கோளாறுகளும் ஒழிந்துவிடும். மனிதர்களுக்குள் சமரச வாழ்க்கை நிலவ வழியுண்டாகும்.

ஆகவே நன்றியை மனிதனுடைய கடமையாக நினைக்காதவரையில், "நன்றியறிதல்" என்னும் குணம் ஒழியாது.

அன்றியும் ,நன்றியறிதல்" என்னும் குணம் எல்லா நூல்களிலும் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருப்பினும், அது எல்லோரையும் நன்றி செய்யத் தூண்டுவதாகமாட்டாது. நன்றியை மறவாதிருத்தல் நன்மை செய்வதற்கு அடிப்படை என்று கருதியே நன்றி மறவாமையை நீதிநூலார்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்று கூறலாம், ஆம்; இது உண்மைதான். நன்றி மறவாமைக் குணம் ஏற்படுவதனால் நன்மை செய்ய முந்துபவர்கள் சிலரே என்றுதான் கூறமுடியும். பெரும்பாலானவர்கள்—அதாவது ஏழைகள்—நன்றி செய்யும் சக்தியற்றவர்கள்—வழிபாடு செய்யவே ஆரம்பித்து விடுகிறார்கள். இதன் மூலம் அடிமைத் தன்மையே வளர்கின்றது.

ஆதலால் உண்மையில் ஜன சமூகத்தைப் பிணித்துள்ள அடிமைக்கயிறு அறுந்து விழவேண்டுமானால்—நன்றி கடமையாக மாறவேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். நன்றி செய்வது கடமை என்ற எண்ணம் ஒவ்வொரு மக்கள் மனதிலும் நிலைபெற்றுவிடுமானால், எல்லோரும் நன்றி செய்யக் கூடியவர்களாக மாறிவிடுவார்கள்; ஒருவருக்கொருவர் தீமை செய்ய நினைக்கமாட்டார்கள். ஜன சமூக வாழ்க்கை துன்பமற்றதாகவும் இன்பமுள்ளதாகவும் சிறந்து விளங்கும்

ஜோசியமும் சகுணமும்.

மத சித்தாந்தங்களிலுள்ள நம்பிக்கையே மாக்தரின் பகுத்தறிவைச் சிதைத்து, அவர்களை ஜோதிட தீர்க்கதெரிசிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் மாயவலைகளில் எளிதில் அகப்படுமாறு செய்கின்றது.

மறைவாக உள்ள இடத்தைக் காணவேண்டுமென்பதில் மனிதனுக்கு ஆவல் அதிகம்; அதனால் இனி வரப்போகும் எதிர்கால சம்பவங்களை முன்னமே உணர்ந்து, அவைகளால் தனக்கு, தற்காலத்திலிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒழிவதற்கு ஏதாவது வழியுண்டாவென்பதுபற்றி அளவு கடந்த ஆசையோடும் விசாரிக்கத் தொடங்குகின்றான்.

பூசாரிகளும், மத குருக்களும் எதிர்காலத்தைப்பற்றி முன்னமே அறிந்துகொண்டிருப்பதாக எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கின்றனர். தேவதைகளுக்குப் பலியிடப்படும் பிராணிகளைத் தும்மல், துடித்தல் முதலிய நடிவடிக்கைகளை கவனித்தல்; பறவைகள் பறந்துபோகும் திசைகளைப் பார்த்தல்; அந்நாட்டினருக்கு ஏற்பட்ட யுத்தம் முதலிய சம்பவங்களை வேத (Silylline books) பாராயணம் பண்ணுதல்; கஸாண்டிரா (Cassandra) வின் கதை; முதலிய இவைகள் கிரேக்கர், உரோமர் என்பவர்கள் எதிர்கால சம்பவங்களை அறிவதற்கு அடையாளங்களாக மேற்கொண்டார்களென்பது நன்கு விளங்குகின்றன. இன்னும் மந்திரவாதிகளென்ன, மையிட்டுக் குறி பார்க்கின்றவர்களென்ன, ஜோதிட ரேகை சாஸ்திரக்காரர்களென்ன; தீர்க்கதரிசிகளெனப் படுவோரென்ன—இவர்களெல்லாம் சட்ட விரோதமான பல செய்கைகளை மேற்கொண்டு ஒன்றுமறியாத பாமர மக்களைத் தங்களிஷ்டம் போல் ஆட்டிவருகின்றனர். இந்தியாவிலே மேற்கூறியோர் தங்களுடைய அட்டகாசங்களைப் பாமர மக்களிடத்தில் மாத்திரம் இன்றி, படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களிடத்திலும் சுலபமாகச் செலுத்திவருகின்றனர். பூசாரிகள், மனிதர்களின் வாழ்நாளின் நிலமையைக் காட்டுவதற்கென்று ஜாதகங்களைக்கணித்து வருகின்றனர்; அதோடு வாழ்நாளில் நிகழவிருக்கும் தீமைகளைப் போக்கும்பொருட்டுப் "பிராயச்சித்தம்" என்னும் பெயரால் பல வகையான

மந்திர தந்திரங்களையும், சடங்குகளையும் கைக்கொண்டு ஜன சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்.

அற்ப சம்பவங்களிலிருந் தெல்லாம் நற்சகுணமென்றும், துற்சகுனமென்றும் ஏற்படுத்திக் கொண்டு, தொடங்கிய காரியங்களுக்கெல்லாம் அவைகளைப் பார்க்கின்றனர். தெருவில் நடக்கும்போது ஒரு பூனை வலமாதலையும், இடமாதலையும் கண்டு, அதனால் நல்லது கெட்டது உண்டாகும் என்று கருதப்படுகின்றது. ஒரு காரியத்தை உத்தேசித்துப் போகும் போது ஒரு கைம்பெண் எதிரேவரின் கெட்ட சகுணமாம். அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் கைகூடாதாம்; ஆனால் ஒரு கட்டுக்கழுத்தி, அதுவும் நிறைந்த நீர்க்குடத்துடன் எதிர்ப்படுவாளானால் அது மிகவும் மேலான நற்சகுனமாம் அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் சடிதில் முட்டின்றி நிறைவேறிடுமாம்! வாரத்தில் ஒரு சில நாட்கள் தாம் நல்ல நாட்களாம்; ஏனையவை சூலம் கொண்ட கொடிய நாட்களாம்!

இம்மாதிரியான மூடத்தனமுள்ள சகுன நம்பிக்கைகள் எண்ணிக்கையில்லாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்தியர்களுக்கு, அவர்கள் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் கூட வருத்தத்தையும் பயத்தையும் உண்டாக்குகின்றன. இம்மாதிரியான மூடக்கொள்கைகளாகிய வித்துக்களை இளைஞர்களின் மனதில் சிறு வயதிலே விதைத்துவிடுவதால் அவைகள் அவர்களிடத்தில் நன்றாக வேரூன்றிச் செழித்துக் கிளைத்து வளர்ந்து வருகின்றன; அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை அகற்றுவதென்றால் முடியாத காரியமாகிவிடுகிறது.

மனிதனின் வாழ்நாளில் நிகழப்போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் சாஸ்திரங்களிலெல்லாம், ஏதோ நக்ஷத்திரங்களின இருப்பைக்கொண்டு கணிக்கப்படுவதாகக்கூறும் ஜோதிட சாஸ்திரமே மிகச் சாதாரணமாகவும், அதி முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. அதிகக்கல்வி கற்று தேர்ச்சி பெற்ற மேனாட்டு அறிஞர்களிலும் கூட அநேகர் இந்தச் சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அந்த வருஷத்தில் நிகழப்போகும் முக்கியமான சம்பவங்கள் என்னவென்பதையும், எவரெவர் சாகப்போகின்றனர், பருவ காலங்கள் என்ன நிலமையிலிருக்கப்போகின்றனவென்பனபோன்ற விஷயங்களை

யும் பிரபலமாகப் புஸ்தகங்களில் அச்சிட்டு வெளியிடுகின்றனர். சோதிடத்தின்மூலமாகப் பொருள் பறிப்போரைத் தண்டிக்க இங்கிலாந்துதேசத்தில் சட்டம் இருந்தபோதிலும் அங்நாட்டில் உள்ள அனேகர் இன்னும் சோதிடத்தைக் கையாடிவருவதைக் காணலாம். அநேக நாவல்கள்—ஏன்—ஸ்காட் (Scott) எனும் பேர் பெற்ற நாவலர் எழுதிய "கை—மேனரிங்" (Guymannering) "க்வெண்டின்—டர்வார்ட்" (Quentin Durward) எனப்படும் நாவல்களில் கூட இந்தச் சோதிட விஷயம் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகாயத்தில் ஆகர்ஷண சக்தியால் பல்வேறு கதிகளில் செல்லாநின்ற இந்த நக்ஷத்திர கூட்டங்களுக்கும், ஓர் மனிதனுடைய வாழ்நாளின் சம்பவங்களுக்கும், எப்படிச் சம்பந்தம் ஏற்பட்டதென்பதும், அவற்றை இவர்கள் எவ்வாறு அறிந்து இத்தனை நம்பிக்கையோடு கையாளுகின்றனர் என்பதும், அறிவிற்கே எட்டாததாக இருக்கின்றது ஆனால் இந்த ஜோதிட கணித சாஸ்திரம் எல்லாத் தேசங்களிலும் கையாளப்படுவதோடு, அந்த விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் மிக்கத் திறமையும், புத்தி நுட்பமும் உள்ள பலரால் நம்பப்பட்டுவருகின்றதென்பதும் உண்மையேயாகும்.

எந்த அறிவாளியும் ஒரு விஷயம், ஏறக்குறைய சற்றேனும் தனது பகுத்தறிவிற்கு எட்டக்கூடியதாக இருந்தால் "முற்றிலும் நம்பத்தகாதது" எனக்கூற மாட்டான் என்பது உண்மை. இதனால் தான் வெளிமாத்திரம் மூட சித்தாந்தங்களாக விருந்த பல கொள்கைகள் பின்னால் அறிஞர்களால் நன்கு ஆராய்ந்துணரப்பட்டு அவற்றிலுள்ள உண்மைத் தத்துவங்கள் வெளியாக்கப்பட்டன. உதாரணமாகச் சூரியப்பிரவேசத்துள் காணப்படும் பலவித மங்குல் புள்ளிகளுக்கும் (Sunspots) பருவக் காற்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தைப்பின்னால் பௌதிக வானசாஸ்திரிகள் நன்கு பரிசோதனை செய்து அதன் உண்மைத் தத்துவத்தை விளக்கினார்கள். "சூரிய வெளிச்சம் நமது தேகத்தில் நேராகப்படாவிடினும் அதனால் நமது இரத்தத்தில் மாறுதல் ஏற்படுகின்றது" என்ற விஷயமும் சாதாரணமாக நம்பத்தக்கதாக இல்லை. ஆனால் தேக சாஸ்திர விற்பனனர்கள் சில வியாதிகளுக்கு மூல காரணமாக இருக்கும் கிருமிகள், இரத்தத்தை இரவில் பரிசோதிக்கும்போதுதான் புலப்படுகின்றதென்பதையும், பகலில் அவை காணப்படுவதில்லையென்பதையும் தங்களுடைய ஆராய்ச்சியினால் நிரூபித்திருக்கின்ற

னர். இருந்த போதிலும் இம்மாரிதியான, வெளிக்கு நம்பத்தகாத விஷயங்களையும், விஞ்ஞான தத்துவ முறைப்படி ஆராய்ந்தறியப்படுவரை, நம்பாவலிருத்தல் சால ஏற்புடைத்தாம்.

சோதிடத்திற்கும், முற்கூறியவாறு ஏதாவது அடிப்படையான உண்மைத்தத்துவங்களிருப்பின், அவற்றிற்குள் ஊசம்பந்தங்களை விஞ்ஞான முறையாக எடுத்துக் காட்டினாலன்றோ அது உண்மையென்று கொள்ளப்படும்? முதலாவதாக அவ்வித அடிப்படையான தத்துவங்களிருக்கின்றனவென்பதற்குச் சரியான—அதாவது இவைகள் தான் என்ற குறிப்பான—இதுவோ அதுவோ, வென்ற சந்தேகங்களுக்கு இடம்இல்லாத—ஆதாரங்கள் இவைகள் தான், என்று நமக்குத்தெரியவேண்டும். பரர்க்கப்போனால் இந்தச் சோதிடர்கள், இரண்டு மூன்று விதமாகப் பொருளைத் திரித்தும் மறித்தும் கூறும் புரட்டு மொழிகளை முதன்மையாக கையாளுவதோடு, அவர்கள் கூறும் சோதிடமானது பல பொருள் படும் மிக்க சாமர்த்தியமான வாக்கியங்களினாலேயே அமைக்கப்பட்டிருப்பதும் வெளிப்படையாகத்தெரியும். இன்னும் இந்தச் சோதிடர்கள் குறிப்பாக வெளியிடும் ஆதாரமுள்ள விஷயங்களில் உண்மையாக நடப்பவை எத்தனை? பொய்யாகப் போகின்றவை யெத்தனை? என்பவைகளையும் கணக்கிட்டு, எவை அதிகமாக இருக்கின்றன என்பதைக் கண்டு தெரியவேண்டும். தவிர—அவ்வளவு முக்கியமன்றெனினும்—எந்தெந்த நக்ஷத்திரங்கள் எவ்வெவ்விதமாக மனிதர்களுக்குநன்மை தீமைகளைத்தருகின்றனவென்ற சித்தாந்தம் விளக்கமாகத்தெரிய வேண்டும். மேலும் அவற்றிற்கு மாறுபாடாகக்கூறப்படும் எதிர்ப்புகளுக்கேற்ற சமாதானங்களும் அளிக்கப்படவேண்டும். இந்தப் பூலோகத்தில் வாழும் மாந்தரை ஒன்றாக ஏடுத்துக்கொண்டோமானால், சாதாரணமாக ஒரு விநாடி (Second) யில் இருபது அல்லது முப்பது [30] குழந்தைகள் ஜனனமெடுக்கின்றன. அவைகள் யாவும் சோதிட சாஸ்திரப்பிரகாரம் ஒரே நக்ஷத்திர பாதத்தில் தான் பிறந்ததாகக் கொள்ளவேண்டியிருப்பதால், அவைகள் ஒரேமாதிரி உருவத்தோடு பிறந்து, ஒரே தன்மையில் வாழ்ந்து ஒரே காலத்தில் இறக்கவும் வேண்டுமன்றோ! உலகவழக்கில் அவ்வாறு இருக்கின்றதா? தவிர, அநேக விஷயங்கள் புதிது புதிதாகக்கண்டு பிடித்துவருகின்றனர். ஏன், மரணத்தைத் தருவதான அநேக நவீன முறைகளும் தற்காலத்தில் சாதாரணமாகக் கையாளப்படுகின்றன. இவைகளையெல்லாம் முறைதவறாமல் ஆகாயத்தில் விரைந்

தேகும் நக்ஷத்திரங்களுடன் சம்பந்தப்படுத்துதல் பொருத்த முடையதல்ல என்பது வெளிப்படை.

மேற்குறித்தவைகளைத் தவிர, ஏனையகாரணங்களால், தக்க அத்தாட்சிகள் இல்லாத சோதிட சாஸ்திரத்தை இன்னும் மறுக்க முடியாத ஆதாரங்கள் இருந்தாலொழிய, அறிவாளிகள் நம்பமாட்டார்கள் என்பது திண்ணம். இந்தச்சோதிடத்தை இத்தனைகாலமாக எவ்வளவோ மக்கள் நம்பிக்கையோடு கையாண்டு வருகின்றார்கள் என்பதாலேயே அது சோதிட சாஸ்திரத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை ஒரு சிறிதும் விளக்குவதாகாது; அது மக்களின் அறிவு, இன்னும் பரந்த நோக்கம் பெறாமல் குழந்தைப்பருவத்திலேயே இருக்கின்றதென்பதைத்தான் உணர்த்துவதாகும்.

சோதிடத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை, உள்ளபடி ஒரு மோசடியான சாஸ்திரமென்றே, கூறவேண்டியிருக்கிறது. அதில் நம்பிக்கை வைப்பது அநேக கஷ்டங்களையும், மனக்கிலேசத்தையுமே உண்டு பண்ணுவதாயிருக்கின்றது. இதனால் மக்கள், பூசாரிகளுக்கும், மந்திரவாதிகளுக்கும், நக்ஷத்திர அதிதேவதைகளைத்திருப்தி செய்வதற்கென மணிமந்திர பூஜா கைங்கரியங்களுக்கும் ஏராளமான பொருளைப் பறிகொடுக்கின்றனர். சோதிடமே உண்மையென ஏற்றுக்கொண்டபோதிலும் இவர்கள் பூமியில் செய்யும் இந்த மந்திர யந்திர தந்திர பூஜைகள், பரந்த ஆகாயத்தில் எத்தனையோ கோடி மைல் தூரத்திற்கப்பாலிருந்துகொண்டு அதிவேகமாகச்சதா சுழன்று கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களை, எவ்வாறு திருப்தி செய்கின்றதோ அறியோம்!

ஒரு சோதிடன் ஆருடம்பார்த்து, "காலம் போதாததாகவிருக்கிறது" என்று சொல்லிவிட்டால் போதும், அது எவ்வளவு அத்யாவசியமான காரியமாக இருந்தபோதிலும் உடனே அதனைக் கைநழுவும்படி விட்டுவிடத்தயாராக இருக்கும் எத்தனையோ மனிதர்களை இப்பொழுதும் காணலாம். நல்ல அழகும், சம்பத்துகளும் நிறைந்த ஒரு வாலிபனோ, அல்லது கன்னிகையோ மூல நக்ஷத்திரம் (Mars) போன்ற இன்னும் சில நக்ஷத்திர நாட்களில் பிறந்திருந்தால் அவர்களுக்குக் கலியாணம் ஆவது மிகவும் கஷ்டமாம்! இந்தமாதிரியான இளைஞர்களின் மணவிஷயமாகத் தினசரிப் பத்திரிகைகளில்

விளம்பரங்கள் மும்முரமாக வந்துவிடும்; ஏனெனில் அந்தக் கெட்ட நக்ஷத்திரத்தில் பிறந்த ஒருவனுக்கும் அதேமாதிரி யான நக்ஷத்திர தோஷமுள்ள ஒருத்திக்கும் மணம் நடைபெறாது; வேறுவிதமாக நடைபெற்றுவிடின், புருஷனோ, மனைவியோ, மாமனாரோ, அன்றி மாமியாரோ கட்டாயம் மாண்டே தீருவார்களாம்! கலியாணமான பின்னர் ஏதோ காரணத்தால் கணவன் கண்ணுறங்கிவிடின், அப்பொழுது அவ்வித இளம் விதவைகள் மிக்க துர் அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குதிரைப்பந்தயம் முதலியவற்றிற்கு, மேல் பணம் கட்டுபவர்கள், அவ்வாறு செய்வதற்கு முன், ஒரு சோதிடனிடம் ஆருடம் கேட்டே பணம் கட்டுகின்றனர். சோதிடன் சொன்ன மாதிரியே அநேக மந்திர தந்திரங்களுடன் நடந்த போதிலும், அவர்களில் அநேகர் பல தடவைகளில், கட்டிய பணத்தை இழக்கின்றனர். எத்தனை தடவைகளில் அவ்வாறு மோசம் போனபோதிலும், அவர்களிடம், இந்த மாயா சோதிடத்தின்பால் வைத்துள்ள மூட நம்பிக்கை குறையாமலிருப்பதை இன்னும் காணலாம். வியாபார நிமித்தமாகத் தங்கள் மூலதனத்தைப் போட்டுச் சரக்குகளைச் சேகரித்து வைத்திருப்பவர்களில் அநேகர், சோதிடனை நம்பி நல்ல காலத்திற்காகக்காத்திருந்து மோசம் போகின்றார்கள். சோதிடத்தை விடுத்துத் தங்கள் சுய மதியை நம்பி நடந்திருப்பார்களானால், மிக்க நலமாகவே யிருக்குமென்பதை அவர்கள் அறிகின்றார்கள் இல்லை. ஒரு அறிவாளிக்கு விஞ்ஞான தத்துவங்களெல்லாம் (Scientific truths) வெளிப்படையான வைகளாகவே யிருக்கவேண்டும்; அவற்றுள் ஏதாவது ஒரு சித்தாந்தம் தப்பிதம் என்பதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் அதனால் என்ன நன்மை நேரிடுவதானாலும் அது தள்ளிவிடப்படுகின்றது. சோதிடமானது வெளிப்படையான உண்மையானதென்று நிரூபித்துக் காட்டப் பட்டது அல்லவாயினும் அதன் கொள்கைகளின் பிரகாரம் நமது எதிர்காலத்தை முதலிலேயே அறிவதால் நமக்கு இப் போதிருக்கும் நன்மை தீமைகளைவிட ஏதாவது அதிகமான நன்மை ஏற்படப்போகிறதா என்பதை நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றோம். இனி என்ன ஏற்படப்போ கின்றதோ என்பது நிச்சயிக்க முடியாததாக இருப்பதனால், எதிர்காலத்தைக் கூடிய மட்டும் தனது மனோவலிமையாலும், சமய சாமர்த்தியத்தாலும் வென்று சமாளிப்பதில் தான், வாழ் நாளில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவன் தனது ஜாத கத்தைக் கொண்டு தனது ஆயுட்காலத்தில் ஏற்படக்கூடிய

ஒவ்வொரு சம்பவங்களையும் முதலிலேயே உணர்ந்து கொள்ளுவானாயின் அவன் தனது நடத்தைகளில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல், தானாக வேறு எந்தக் காரியத்தையும் செய்ய மனம் இல்லாதவனாய், சமுதாய வாழ்விற்கோர் முட்டுக்கட்டையாகவே இருப்பான் என்பது திண்ணம்.

சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொள்வதானது, உயிருக்குயிராய் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் காத்தளிப்பதாகக் கூறும் ஒரு அழியாத கடவுள் மேல் வைக்கும் நம்பிக்கைக்கு முற்றும் மாறானதேயாம். மதத்திலே மாறாத பக்தி கொண்டு தங்கள் இஷ்ட காரியாதிகளுக்காக அந்த சர்வ வல்லமையுள்ள கடவுளையே அடிபணிந்து பிரார்த்தித்து, எண்ணிய எண்ணியாங் கெய்வதாகக் கூறும் பல மத பக்தர்கள்கூட தங்கள் கொள்கைகளுக்கு மாறாக விளங்கும், ''நட்சத்திரங்களின் நியதிப் பிரகாரம் விதித்த விதி மாறாது நடக்கின்றது'' எனக்கூறும் அந்தச் ஜோதிடத்திலும் குறையாத நம்பிக்கையோடிருப்பது எதற்காகவோ அறியோம்.

இம்மாதிரியான ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடையவைகளை நம்பி நடப்பது அவர்கள்தங்களுடை அறிவை நேர்வழியில் செலுத்தாமையே விளங்குகின்றது. மதப்பற்று மிக்குள்ளோருக்கும் பகுத்தறிவிற்கும் வெகு தூரம் போலும்!

நாம் இவ்வளவு அதிகமாகச் ஜோதிடத்தைப்பற்றி வலியுறுத்தவேண்டியேற்பட்டது எதனாலெனில், இரசாயனம் பூகோளம் முதலிய சாஸ்திரங்களே போல் இதனையும் ஓர் உண்மைச் சாஸ்திரமாகக் கருதி வருவதாலும், இதனை முற்றும் நம்பி மோசம் போகும் மாந்தர்கள் இந்தியாவில் மாத்திரம் அன்றி இன்னும் பிறநாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றார்கள் என்பதனாலுமேயாகும். மேற்குறித்த எதிர்ப்புகள் சோதிடம் போன்ற இன்னும் பல போலி சாஸ்திரங்களுக்கும் பொருத்தமானவைகளே. உதாரணமாக மிக்க பிரக்கியாதி பெற்றுள்ள இரேகை சாஸ்திரமும் போலியேயாகும். அறிவைக் கையாளுவோருக்கு எதிர் காலத்தை அறிவிக்கும் ஓர் குறுக்கு வழி இல்லையென்று கூறலாம்.

நாம் அதைப்பற்றி நம் அனுபவத்திற்கேற்ப ஏதோ உத்தேசித்தல் கூடும்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான சமாச்சாரங்கள் நமக்கு எட்டுகின்றனவோ அவைகளுக்கேற்ப நமது

குழந்தை வளர்ப்பு.

(தோழர் S. குஞ்சிதம் குருசாமி B. A. L. T.)

குழந்தைகள் வளர்ப்பு சம்மந்தமாய் நமது நாட்டில் அனேக தவறுகள் நடைபெறுகின்றன.

1921-ம் ஆண்டில் சென்னை நகரத்தில் மாத்திரம் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 5976-இறந்திருக்கின்றன என்றால் குழந்தைகள் வளர்ப்பு விஷயத்தில் நம் நாட்டு சகோதரிகளுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிய வேண்டி இருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

நமது "புண்ணிய பூமி"யில் இருப்பதைப்போல் குழந்தைகளின் சாவு உலகிலுள்ள எந்த "மிலேச்ச" நாட்டிலும் கிடையவே கிடையாது. இதற்கு முக்கிய காரணம் நமது பெண்களுக்கு படிப்பு இல்லாமை ஒன்று; ஆங்கில முதலிய பிறபாஷைகளில் இருப்பதைப்போல் நம் நாட்டு பாஷைகளில் இது சம்மந்தமான புத்தகங்கள் இல்லாமை இரண்டு. எனவே குழந்தைகள் வளர்ப்பு சம்மந்தமாய் ஆங்கிலத்திலுள்ள சில அரிய நூற்களில் கண்ட சில விஷயங்களை இங்கு தொகுத்துத் தருகின்றேன்.

உத்தேசமும் உண்மையாக அமைவதைக்காணலாம். மானச தத்துவங்களின் விவரங்கள் நமக்கு அதிகமாக விளக்கமுறாதிருத்தலின் தற்காலத்தில் "மனிதன் எதிர்காலத்தை அறிதல் என்பது குதிரைக் கொம்பே"யாம்; ஏனெனில் எல்லாவித மனித முயற்சிகளிலும், எதிர் பாராத சந்தர்ப்பங்களைத் தனது புத்தி சாதுர்யத்தாலும், விடாமுயற்சியாலும் கூடுமானவரையிலும் அடக்கியாளலாம். அறிவாளியாக இருக்கின்ற ஒரு மனிதன் தனக் எதிர்பாராத விஷயங்கள் நேர்ந்து அவை மனித முயற்சிகளுக்கு மேற்பட்டுவிடின் அவைகளுக்காகக் கடவுளையும் காலத்தையும் நோகாமல் "ஆனது ஆகட்டும்" என அதன் போக்கிலே எதிர்த்து நின்று தனது திடச்சித்தத்தால் சந்தோஷமடைகின்றான்.

முதலாவதாக எந்தக் காரணத்தைக் கொண்டும் தாயுடன் கூட குழந்தையைத் தூங்க வைக்கக்கூடவே கூடாது.

அதற்கென்று பிரத்தியேகமாக தொட்டில் இருக்க வேண்டும்.

கொசுவலை இல்லாமல் குழந்தையைத் தூங்க வைப்பது மிகத்தவறு. ஏனெனில் குழந்தையின் வெகு சுத்தமான இரத்தத்தில் கொசுவினால் ஏற்படும் விஷம் வெகு சீக்கிரத்தில் பரவி அதனால் மலேரியா சுரம் முதலான நோய்கள் வரும்.

தொட்டிலை ஆட்டும் பழக்கத்தினால் பிறருக்கு அதிகத் தொல்லையே தவிர குழந்தைகளுக்குக் கடுகளவு நன்மையும் கிடையாது.

ஒரு தடவை ஆட்டுவதற்குப் பழக்கி விட்டோமானால் பிறகு இரவு பகலாய் அதே வேலையாயிருந்தால் ஒழிய குழந்தை தூங்காது.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிப்படி தொட்டிலிலேயே நல்ல பழக்கங்களை ஆரம்பிக்க வேண்டியது ஒவ்வொரு தாயினுடைய கடமையாகும்.

குழந்தைகளின் உடை லேசானதாகவும், தண்ணீரை இழுக்கக்கூடியதாகவும், கைகால்களை அசைக்கும்படி தாராளமாகவும், இலகுவாக போடவும் கழட்டவும் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

மழை, பனி முதலிய காலங்கள் தவிர பாக்கி சமயங்களில் கம்பளியால் செய்யப்பட்ட குல்லா முதலிய உடைகளை குழந்தைகளுக்குப் போடுவது மிகத்தவறு.

சுத்தமான காற்று தாராளமாக வரக்கூடியதும், நல்ல சூரிய வெளிச்சம் இருக்கக் கூடியதுமான இடங்களில் குழந்தைகளைப் படுக்கவைக்கவேண்டும். குறிப்பாக, இரவில் தூங்கும்போது குழந்தைகளுக்குத் தாராளமான காற்று இன்றியமையாததாகும்.

எந்த தேசத்திலும், குறிப்பாக நம் தேசத்தில், குழந்தைகளுக்கு ஏற்படும் பெரிய ஆபத்து ஒன்றுண்டு.

அது என்னவென்றால், குழந்தைகளை முத்தமிடும் பழக்கமாகும். இது சர்வ சாதாரணமாய் இருந்துவருகிறது.

முகத்தில் முத்தமிடுவதே தவறு என்கிறபோது, குழந்தையின் வாயில் முத்தமிடுவது எவ்வளவு ஆபத்தை உண்டாக்கக்கூடியது என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

பெரியவர்களில் 100-க்கு சுமார் 60-பேருக்காவது க்ஷயம் மேகவியாதி சிபிலிஸ் (Syphilis) டைபாய்ட் (Typhoid) சுரம் முதலிய பல தொத்து நோய்கள் உண்டு.

100-க்கு 20, 30 பேருக்காவது வாய் நாற்றம், பல் சம்பந்தமான வியாதிகள் கட்டாயம் இருந்தேதீரும்.

எனவே மேற்கண்ட எந்தவிதமான தொத்து நோயும் இல்லாதவர்கள் 100-க்கு 10-பேராவது தேருவது மிகக் கஷ்டம்.

ஆகையால் குழந்தைகளின் வாயில் முத்தமிடுவது என்பது, அவைகளின் பிற்கால வாழ்க்கையில் நோய்கள் வருவதற்கு நல்ல அஸ்திவாரம் போடுவது போலாகும். இவ்விஷயத்தில் பெற்றோர்கள் அதிக கவனத்தோடிருத்தல் மிகவும் அவசியமாகும்.

இனி, குழந்தைகளின் உணவு விஷயத்தில் சில முக்கிய அம்சங்களைக் கவனிக்கவேண்டியது அவசியம். முதல் ஆறு மாதங்கள் வரையிலாவது குழந்தைக்கு தாய்ப்பாலைத்தவிர வேறு எதுவும் கொடுக்கக்கூடாது.

அவசியமானால், தண்ணீர் சரிபாகம் கலந்த பசும்பாலை எப்போதாவது இடைவேளையில் கொடுக்கலாம்.

மூன்று மணிக்கு ஒரு தடவைதான் அதற்குப்பால் கொடுக்கவேண்டும்.

குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுப்பதென்பது மிகமிகத் தவறாகும்.

இரவில் 10-மணிக்கு மேல் 4-மணி வரையில் பால் கொடுக்காமலிருப்பதே நல்லது.

குழந்தையை தினந்தோறும் விடாமல் குளிக்க வைக்க வேண்டும். இல்லாவிடில் அழுக்கு சேர்ந்து, சிரங்கு முதலான நோய்களுக்கு குழந்தை இலக்காகும்படி நேரும்.

மேற்கண்ட சில முக்கிய அம்சங்களைக் கவனித்து நடந்தால் நம் நாட்டில் குழந்தைகளின் சாவு இவ்வளவு அதிகமாய் இராது. நமது பெண்கள் எல்லோருக்கும் இம்மாதிரியான விஷயங்களை எடுத்துச் சொன்னால்தான் குழந்தை வளர்ப்பு விஷயத்தில் நம் நாடு கொஞ்சமாவது முன்னேறும் என்று நம்ப இடமிருக்கும்.

மாந்திரீகப் பெண்.

[ஜே. பி. கிருஷ்ணன்.]

"காளியூர்" என்பது சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு சிறிய கிராமம். அவ்வூருக்குப் பெரியதனக்காரர் தோழர் ராமலிங்க ரெட்டியார். காளியூருக்கு அவரே "சர்வாதிகாரி" என்றுங்கூடச் சொல்லலாம், அவ்வளவு நல்ல செல்வாக்கு! ரெட்டியார் நல்லவர்தான், இருந்தாலும் ஒரு முரட்டு சுபாவம், படிப்புக் குறைவு!

நல்ல மனிதர்களையும் "மதப்பித்து" பொல்லாதவர்களாக்கி விடுகிறது என்பது அனுபவ உண்மை. ஜெர்மன் ஹிட்லருக்கு பொதுவுடமைக்காரர்களைக் கண்டால் எப்படியோ அப்படித்தான் சுயமரியாதைக்காரர்களைக் கண்டால் ரெட்டியாருக்கு!

காளியூருக்கு ஒரு மாந்திரீகப் பெண் வந்து சேர்ந்தாள், சிறு வயதினள், மிக்க அழகி. தன் வீட்டைத் தேடி வந்த அந்த மாந்திரீகப் பெண்ணால், தனக்கு ஒரு பெருமையும், கௌரவமும் கிடைத்து விட்டதாக ரெட்டியாருக்குச் சந்தோஷம்!

அவளுக்குச் சாப்பாடு முதல் சகல வசதிகளும், தன் வீட்டிலேயே, உற்சாகமாகச் செய்து கொடுத்தார். பழைய காலத்துப் பார்ப்பன வாத்தியாரிடம் பாடங்கேட்கும் "அல்லாத" சிறுவனைப் போல் பணிவாக நடந்து கொண்டார் ரெட்டியார் அந்தப் பெண்ணிடம்.

ஃ ஃ ஃ

மாந்திரீகப் பெண்ணிடம் உண்மையில் ஒரு "சக்தி" இருந்தது. ஜோசியம், மாந்திரீகம், இவைகளை எதிர்ப்பவருங்கூட நேரில் பார்த்த பின், அவளுக்குப் பரிந்து பேசுவார்கள். காரணம் அவள் மிக்க அழகியோடுங்கூட, ஆளுக்குத் தகுந்த மாதிரி இனிமையாகப் பேசும் ஒரு படித்த பார்ப்பனத்தி.

நாட்டில் நிலவும் பெண்கள் சுதந்திரக் கிளர்ச்சி முதல், இத்தாலி—அபிஸீனியா போர் வரையிலும், சகல விஷயங்களையும் அவளிடம் கேட்டுக்கொள்ளலாம்! பொதுவாக, அவள் ஒரு கதம்பப் பூச்செண்டு போல் விளங்கினாள். அவள் பெயர் வேதநாயகியம்மாள்.

வந்து 3 நாளாயிற்று. தன்னுடைய மாந்திரீக மாயா விநோத சக்திகளைக் காட்ட, சந்தர்ப்பத்தை நோக்கியிருந்த மாந்திரீகப் பெண்ணுக்கு ஒரு நல்ல வேட்டை! ராமலிங்க ரெட்டியாரின் இளைய சகோதரி பார்வதிக்குப் பேய் பிடித்த மாதிரி ஒரு விதப் பைத்தியம் உண்டு. அது இப்பொழுது அதிகரித்து விட்டது. அது "பேயின் சேஷ்டைதான்" என்று எல்லோரும் முடிவு கட்டினர்.

தக்க சமயத்தில் மாந்திரீகப் பெண் வந்திருப்பது ரெட்டியாருக்குச் சந்தோஷம்! உடனே பார்வதியை அவளிடம் ஒப்புவிக்கப் பட்டது.

ஃ ஃ ஃ

பார்வதி ஒரு பாலிய விதவை. வயது 19. உடலுறம் பெற்ற ஒரு சிறந்த அழகி. இருந்தாலும் அவளுக்கு 'இன்ப வாசல்' அடைபட்டு விட்டது! சமூகம் அவளைக் கொல்லாமல் கொல்லுகிறது! இன்ப நுகர்வின் ஆர்வம்! மீறும் உணர்ச்சி! இவைகளுக்கு எரு விட்டதைப் போன்ற சில வாலிபர்களின் காமப்பேச்சும்! கடைக்கண் வீச்சும்! அவள் மனசைப் பிய்த்துப் பிடுங்கியது. கடவுளால் இந்து சமூகத்துக்கருளப்பட்ட "விதவைக் கோலம்" அதை ஜெயிக்க முடியவில்லை. மாற்ற முடியவில்லை.

அவள் புத்தி பேதலித்து விட்டது, என்னென்னமோ பேசினாள், என்னென்னமோ செய்தாள். தனக்குப் "பேய் பிடித்து விட்டது" என்று சொல்லுவதைக் குறித்து பார்வதி வருந்தவில்லை. ஆனால் தன்னைப் பிடித்துள்ள "பேய்" இன்னதுதான், அது இம்மாதிரியெல்லாம் துன்புறுத்தும், என்பது பாழும் இந்து சமூகத்தின் நெஞ்சில் உதைக்கவில்லையே! என்றுதான் கண்ணீர் வடித்தாள்.

ஃ ஃ ஃ

நள்ளிரவு. ரெட்டியார் வீட்டின் தனி அறை. கணார்! கணார்! என்று மணியோசை ஒலித்தது. உடுக்கையும், சிலம்பமும் முழங்கிற்று. சாம்பிராணியும், குங்கிலிய புகையும் புகைந்தது. எருக்கம் பூ, அரளிப்பூக்களின் வாசம் நாசியைத் துளைத்தது. திடீரென்று ஓ ஓ.............என்ற ஒரு சப்தம் ஓங்காரமிட்டது! மாந்திரீகப் பெண்ணின், மந்திர உச்சாடனமும்! அதட்டும் குரலும்! ஆர்ப்பாட்டம், ஊர்ப் பெண்களின் குசு குசுப் பேச்சுகளும், கசபுச வாதங்களும், அறையிலிருந்து காற்றோடு கலந்து வந்தது.

வளர்த்துவானேன்; பேய் ஓட்டுவதற்குச் செய்யும், சம்பிரதாயங்களெல்லாம், அந்த ஆடம்பரமாக நடைபெற்று ஓய்ந்தது. இது 4.வது நாள். இப்படியாக இன்னும் 16 நாளைக்கு ஓட்ட வேண்டுமாம். இதிலொரு விசேஷம்! தினசரி பேயாட்டம் முடிந்தவுடன் பார்வதியும், மாந்திரீகப் பெண்ணும், அந்தத் தனி அறையிலேயே படுத்துக் கொள்வார்கள்.

அந்தப் பேய் ரொம்பக் கெட்டது, பார்வதிக்கு ஏதாவது கேடு விளைவித்து விடுமாம், அதற்கு மாந்திரீகப் பெண் பாதுகாப்பு!

ஃ ஃ ஃ

பேயோட்ட ஆரம்பித்து 10 நாட்களாகி விட்டது. பார்வதி வர வர சுகமடைந்து வந்தாள். பேயும் கொஞ்சங் கொஞ்சமாகப் போகத் தொடங்கியது இதற்குள் மாந்திரீகப் பெண்ணுக்கு நல்ல பெயர்! காளியூரிலும், சுற்றுப்புறங்களிலும் ஏராளமான பிரக்யாதி! தகுந்த இடங்களிலிருந்து கிறாக்கிகள்! சன்மானங்கள்! புகழ் மாலைகள்! வந்து குவிந்தன!

“ராமலிங்க ரெட்டியாருக்கு இன்னும் தான் செய்யவேண்டிய ஒரு ‘பெரிய உபகாரம்’ உண்டு அதற்குப் பிறகுதான், மற்றவர்களது விஷயங்களை கவனிக்கப்படும்” என்று மாந்திரீகப் பெண் தன்னை அழைத்தவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளினாள்.

அந்த விஷயம் வெளியில் சொல்லக்கூடாத ரகசியம்! பெரிய மனக்கோட்டையின் சிகரம்!

நிற்க, பேயோட்டக்குறித்த 20 நாட்களும் சென்றது. பேயும் ஓடிவிட்டது! பார்வதி இப்பொழுது உற்சாகம் நிறைந்த ஒரு புதிய பெண்ணாகத் தோற்றுகிறாள். அவள் அழகு பன்மடங்கு பிரகாசித்தது! உடல் பூரித்தது மனம் சாந்தியும், சமாதானமும் பெற்றது! அவள் முகத்திலே சந்தோஷம் கலந்த ஒரு இனிய புன்னகை! நிர்மாணிக்கப்பட்ட எதிர் காலச்சந்தோஷ வாழ்க்கையை எண்ணி எண்ணி மணமகிழும் ஒரு புது மணப்பெண்போல விளங்கினாள் பார்வதி.

ஃ ஃ ஃ

மாந்திரீகப் பெண் ரெட்டியாருக்குச்செய்யும், அந்தப் “பெரிய உபகாரம்” ரெட்டியாரின் புடக்களையிலே ரகசியமாக ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்கள் கழிந்தது. இன்னும் ஒரே ஒரு நாள் தான்! அது பூர்த்தியடைந்தால் ஹா! ரெட்டியார் எவ்வளவு செல்வந்தராகிவிடுவார்! எவ்வளவு பவுன்கள்! எத்தனை வைர ஆபரண

ங்கள்! எத்தனைத் தங்க நகைகள்! நாணயங்கள்! அத்தனையும் நினைக்க, நினைக்க ரெட்டியாரின் மனம் பூரிப்பால் வெடித்துவிடும் போலாகிவிட்டது.

அன்றுதான் கடைசிநாள். நடுநிசி! வானத்திலே வெண்மே கக்கூட்டங்கள்! சந்திரன் அமுத கிரணங்களை அள்ளி வீசினான்! எங்கும் பால்போன்ற நிலவொளி! மாந்திரீகப்பெண்ணின் உத்தரவுப் படி, ரெட்டியார் வீட்டுப்பெண்கள் அணிந்திருந்த சகலவித ஆபர ணங்களையும் கழட்டி அவளிடம் கொடுக்கப்பட்டது. அவைக ளைப் புதையலுக்குப் பக்கத்திலே, தற்காலிகமாகப் புதைத்து, புதையலை எடுக்கும்போது சேர்த்து எடுத்துக்கொள்வதாம்! புதை யல் தேவதைக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவது, என்பது அதன்சித்தாந்தம்.

சகலவித பூஜா திரவியங்களும் குவிந்துக்கிடந்தது. பலியிடு வதற்கு ஒரு கறுப்பு ஆடு கட்டப்பட்டிருந்தது. கைகட்டி, வாய் பொத்தி, பயபக்தியுடன் ரெட்டியார் குடும்பம் சூழ்ந்து நின்றது. எங்கும் நிசப்தம்.

மாந்திரீகப்பெண் சொன்னாள்:—

ரெட்டியாரே! நீங்களெல்லாம் இனி இங்கிருக்கவேண்டாம், இந்தப் புதையலைக் காப்பது மகா துஷ்ட தேவதை! அதை வசப் படுத்த அதனுடன் போராடவேண்டும்! அந்த பயங்கரக்காட்சியை பார்த்தால் நீங்கள் செத்துப்போவீர்கள்! ஜாக்கிரதை! ஞாபகமிருக் கட்டும். காலை ஆறுமணிக்கு மேல், நான் கூப்பிடும் வரையில் இந் தப் பக்கம் யாரும் தலைநீட்டவேண்டாம்! போங்கள், இதுவே தேவ வாக்கு!

ஃ ஃ ஃ

விடிய, விடிய ரெட்டியார் ஆசையோடு விழித்திருந்தார். குடும்பத்திற்கே அன்று ஏகாதசி! ஆறுமணி ஆயிற்று. புதர்க்க ளையிலே எந்த சப்தத்தையும் காணோம். ரெட்டியார் புதைய லைப்பார்க்கத் துடிப்பாய்த்துடித்தார்! மணி ஏழு, எட்டு, ஒன் பது என்று ஓடியது! அவரது ஆவல் கரைபுரண்டு விட்டது. பளிச்சென்று மனதில் ஒரு சந்தேகமும் தோன்றியது! முகத்திலே ஏமாற்றம் வழிந்தோட புதர்க்களையை நோக்கி நடந்தார். திடுக் கிட்டு அப்படியே அசைவற்று நின்று விட்டார்!

என்ன ஆச்சரியம்! மாந்திரீகப்பெண் தோழர் வேதநாயகி அம்மையார் அவர்களே அங்கில்லை!! கழுத்தறுபட்ட ஆடும்,

பூஜா திரவியங்களும், சிதறிக் கிடந்தது. எல்லாம் ஒரே பாழாகத் தோன்றியது! புதையல் குழிக்கருகே சென்றார். அந்தக்குழியைத் தோண்டப்பட்டது, அங்கு புதைத்த வீட்டு நகைகள் அடியோடு காணப்படவில்லை! ஆனால் மூன்றடி ஆழத்தின் கீழே ஒரு செப்புத்தவலை கிடைத்தது. மீண்டும் மனசில் தோன்றிய ஆசையோடு ரெட்டியார் அதன் மூடியைத்திறந்தார். அவர் பார்த்தவைகள் என்ன? பவுன் குவியல்களா? தங்க நகைகளா? நாணயங்களா? வைர ஆபரணங்களா? இல்லை, இல்லை, அவைகளைப்போன்றே பித்தளையால் செய்யப்பட்டு, மூலாம் பூசப்பெற்ற போலி ஆபரணங்கள்! போலி வைரவங்கள்! போலி பவுன்கள்!!

ஆனால், அத்துடன், ஒழுங்காகத் தன் விலாசமிடப்பட்ட ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது.

ரெட்டியாரின் நெஞ்சின்மேல், ஒரு பெரிய பாராங்கல், விழுந்த மாதிரி இருந்தது! அவரது மனக்கோட்டை ''தடதப'' வென்று சரிந்து விழுந்தது, ஒன்றும் தோன்றாமல் அப்படியே சோகத்தோடு சாய்ந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

ரூபாய் 9000, பெறக்கூடிய நகைகள்! ரெட்டியாரின் குடும்பம் இரண்டு நாளாகப் பட்டினி! இத்துடன் விட்டதா!

''பார்வதியைக்காணோம்!'' என்ற செய்தி ரெட்டியாரின் வைதீகப்பச்சை ரெத்தத்தையே துடிக்கச்செய்துவிட்டது! நன்றிகெட்ட, கடவுள்கள்! பக்தர்களுக்கு இவ்வளவு பயங்கரச் சோதனையா? நாஸ்திகம் வலுத்துவிடும் என்ற யோசனை கொஞ்சங்கூட இல்லையே! எதிர்காலத்தில் இந்தக்கடவுளெல்லாம் எப்படித்தான் பிழைக்குமோ தெரியவில்லை!

''அந்தக்கடிதம்'' ஆம்! அது பார்வதியின் எழுத்துப்போன்றிருந்ததே! மறந்தே விட்டேன்! என்று சொல்லிக்கொண்டே கடிதத்தை எடுத்துவந்து பிரித்தார். மனதுக்குள்ளே படித்தார்.

அண்ணா! தங்கள் பார்வதி வணக்கம்!

மன்னிக்கவும், தாங்கள் ஏமாந்துவிட்டீர்கள்! மாந்திரீகப் பெண்ணை இன்னுங்கூட ஒரு பெண்ணென்றுதான் நம்பியிருப்பீர்கள். அவள் ஒரு அழகிய பிராமண வாலிபன்! வேஷதாரி! கொள்ளைக்காரன்! மத பக்தர்களை, மாந்திரீகப்பிரியர்களை மட்டந்தட்டும், சாமர்த்தியம் வாய்ந்த படிப்பாளி!

அவரை, என்னைப்பிடித்த பேயை ஓட்டுவதற்கு நியமித்தீர்கள். கட்டளையை நிறைவேற்றினார்! கொடிய 'வைதவ்ய'ப்பேயை ஓட்டியதுடன், என்னையும் ஆட்கொண்டு விட்டார். 20 நாட்களாகத் தனி அறையில் என் அன்பரோடு இன்பத்தின் எல்லை கண்டேன்! புத்துயிர் பெற்றேன்! விதவைக்கு வாழ்க்கையில்லை, இன்பமில்லை, சுகமில்லை, நல்ல உணவில்லை, அதுதான் தலைவிதி, பிரமன் கட்டளை, என்ற ஜீவகாருண்யமற்ற நமது இந்து மதக் கோட்பாடுகளை விட, கொடியவன், வஞ்சகன், பொய்க்காரனாகிய எனது காதலன் எவ்வளவோ சிறந்தவன்! மேலானவன்!

எங்கள் இரு மனசும், உடலும், ஒன்றுபட்டு விட்டது, கல்யாணம் என்ற "கூத்து" எங்களுக்குத் தேவையில்லை. என் வேண்டுகோளுக்கு அவர் இசைந்து விட்டார், அவருக்கு கௌரவமாக சம்பாதிக்க வழி தெரியும். இனி அவர் மாந்திரீகக்காரியான வேதநாயகியம்மாளல்ல. மேன்மை பொருந்திய எனது......

உங்களை ஏமாற்றுவதுதான் கடைசி. வருந்த வேண்டாம், என்னை "முண்டை"யாக்கி, நீங்கள் சுகமனுபவித்ததற்காக, நமது குடும்ப நகைகளை நானே போட்டுக்கொள்ளுவேன்.

மாந்திரீகத்தின் உண்மை சொரூபம், ஏமாற்றந்தான், என்பது சிலாது வாதம், அது பொய். மாந்திரீகர்களுக்கும், ஜோசியர்களுக்கும், எப்பொழுதுமே லாபம் உண்டு. அனுபவத்தில் நீங்களும் கண்டு விட்டீர்கள்; இது ஒரு நல்ல பாடம்! எங்களைத் தேட முயற்சிக்க வேண்டாம். அது வீண் ரகசியம், கடைசியாக என்னை வாழாமல் வாழ வைத்த உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தங்கள், பார்வதி.

செட்டியார் "திரு திரு"வென்று விழித்தார்! அவர் முகத்திலே அசடு நிறைந்து வழிந்தது. ஆத்திரம்! ஏமாற்றம்! வெறுப்பு! துக்கம்! சோகம்! எல்லாம் அங்கு, குதித்துக் கும்மாளமடித்தது.

பரிதாபத்துக்குறிய விதைவைகளே.

நீங்கள் புருஷர்களுடன் கூடி வாழ ஆசைப்பட்டீர்களானால் உங்கள் அபிப்பிராயத்தை பெற்றோர்களுக்குத்தெரிவியுங்கள். அவர்கள் அதை கவனிக்கவில்லையானால் உங்களுக்கு இஷ்டமான நாயகனுடன் கூடி வாழுங்கள்.

M. K. காந்தி.

நாஸ்திகன் நன்னெறி அற்றவனா?

[டாக்டர் வேல்ஸ்.]

"நாஸ்திகன்" என்னும் பதத்துக்கு டாக்டர் வேல்ஸ் கூறும் வியாக்கியானத்தை தோழர் ஹக்ஸ்லி மேற்கோளாக எடுத்தாண்டு கேலி செய்கிறார். டாக்டர் வேல்ஸ் கூறுவதாவது:—

நாஸ்திகன் என்னும் பதம் விரும்பத்தகாத முறையில் வழங்கப்படுகிறது. அதாவது மதப்பற்றுடையார்கள் அம் மதத்திற்கு மாறான கருத்துள்ளவர்களை இழிவு படுத்தவே நாஸ்திகம் என்ற பதத்தை வழங்குகிறார்கள். அது ஒரு வசைமொழியாகக் கற்பித்துக்கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் உண்டு என்று நம்புவதை மற்ற யாராவது இல்லையென்று மறுப்பது அக்கிரமம் என்பது அவர்கள் கருத்து.

ஆகவே, ஒருவனை நாஸ்திகனென்று அழைப்பதானால் அவன் நன்னெறியற்றவன் என்று பிறர்கருதவேண்டுமென்பது அழைப்பவர்களின் கருத்து.

கொஞ்சகாலத்துக்குமுன் நாஸ்திகர் எனப்படுவோர் சமுதாய பிரஷ்டர்களாகக்கூட மதிக்கப்பட்டனர்.

அதற்கும் கொஞ்ச காலத்திற்குமுன் நாஸ்திகர் எனப்படுவோரை அரசர்கள் ஹிம்சித்தும் வந்தனர்.

அதற்கும் வெகு காலத்துக்குமுன் நாஸ்திகர் எனப்படுவோருக்கெல்லாம் சித்திரவதையும், மரண தண்டனையும் விதிக்கப்பட்டு வந்தது.

இப்போழுதோ அந்நிலைமை முற்றிலும் மாற்றம் அடைந்துவிட்டது என்றாலும் சாமான்ய ஜனங்களால் மதம் என்று கூறப்படுவதை மறுப்பவர்களையெல்லாம் தூஷித்துச் சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதுவதும், அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி ஞான முன்னேற்றத்திற்கும் தடை உண்டுபண்ணி,

வைதிகத்துக்கு ஆதாரவளிப்பதுமாயிருந்து வருகிறதானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது.

நிற்க வேதங்களெல்லாம் தெய்வ வாக்கென்றும், வேதங்களை மறுப்பது கடவுள் இல்லையென்று மறுப்பதற்கு ஒப்பாகுமென்றும் மக்கள் பொதுவாகக்கருதி இருக்கும் நம்பிக்கையே சாமான்ய மதக்கோட்பாடுகளை மறுப்பவனைக்கூட நாஸ்திகனென்று பழிக்கப்படுவதற்கு மூலகாரணமாயிருக்கிறது.

ஆனால், வேதங்களெல்லாம் தெய்வத்தின் சொந்த வாக்கென்று நம்புவதென்பது நாஸ்திகனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது

ஆகவே, நாஸ்திகன் கடவுள் வார்த்தைகளையாவது, கடவுள் கட்டளைகளையாவது ஒருபோதும் மறுக்கவில்லையென்பதும், மனிதனுடையவார்த்தைகளையும் கட்டளைகளையும் மட்டுமேதான் அவன் மறுக்கிறான் என்பதும் யோசித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

சர்வ சக்தியும், சர்வ வியாபாகமும், சர்வமும் அறியும் தன்மையும், சர்வ தயாபரத்துவமும் உடைய கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று நம்பின—அறிந்தயெவனும் அப்படிப்பட்டக் கடவுள் ஒருவர் இல்லையென்று மறுக்க முன்வரவேமாட்டான். இதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏனெனில் அப்படிப்பட்ட கடவுளை இல்லை என்று மறுப்பதால் அவனுக்கு என்ன லாபம்?

கடவுள் தண்டனையை அலட்சியம் செய்தாவது இப்படிச் சொல்லவேண்டுமென்கின்ற அவசியம் அவனுக்கு என்ன வந்தது?

அன்றியும் வேதங்களெல்லாம் கடவுளாலேயே கூறப்பட்டனவென்று மனப்பூர்வமாக அறிந்த எவனும்—சந்தேகத்துக்காவது ஆளான எவனும் "வேதங்கள் கடவுள் வாக்கல்ல" என்று மறுக்கவும் துணியமாட்டான்.

வேதங்கள் எல்லாம் தெய்வவாக்கு என்று கூறுவதற்கு வெறும் குருட்டு நம்பிக்கையும் நிர்ப்பந்தமுமே ஆதாரமாக

இருக்கின்றதே ஒழிய, எவ்வித ருஜுவோ ப்ரத்தியக்ஷ பிரமாணமோ ஒன்றும் இல்லை.

எனவே, ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் வித்தியாசம் என்ன? என்று பார்ப்போமானால் முதலாவது, ஆஸ்திகன் புராணங்கள் கூறுபவைகளையெல்லாம உண்மையென்று நம்ப வேண்டுமென்கின்றான். நாஸ்திகன் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இவ்வளவு தான் ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம்.

ஒருவன் ஒன்றை உண்டென்று நம்புவதனாலே உயர்ந்த நெறியுடையவனாக ஆகி விடமாட்டான்; இல்லை என்று மறுப்பதனால் அதனாலேயே நெறிகெட்டவனுமாகான். ஏனெனில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அதனதன் ருசுவைப் பொறுத்தது.

வேதங்களெல்லாம் கடவுள் வாக்கென்றெண்ணி ஆஸ்திகன் அவைகளை நம்புகிறான் என்றாலும், யாரோ சிலர் "வேதங்கள் எல்லாம் கடவுள் வாக்கு" என்று சொன்னதை நம்பித்தான் அவனும் வேதங்களைக் கடவுள் வாக்கென்று நம்புகிறானே அல்லாமல் தனக்கு தேவையான ருஜுவெல்லாம் கிடைத்து விட்டது என்று அல்ல.

ஆனால், அவன் அவ்விஷயத்தைச் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், வேதங்கள் கடவுள் வாக்கென்று கூறுவது 'கடவுள் அல்ல' என்பதும் மனிதன்தான் என்பதும், வேதங்களுக்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்பதும் அவனுக்கு நன்கு புலனாகாமல் போகாது.

ஏனென்றால், என் ஆஸ்திக நண்பர்களில் எவரும் ஒரு பொழுதும் கடவுளைக்கண்டதே கிடையாது. கடவுளிடமிருந்து வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோயாதொரு செய்தியும் அவர்களுக்கு வந்ததுமில்லை.

வேதங்கள் எல்லாம் கடவுள் வாய்பிறப்பு என்பதற்குக் கடவுளிடமிருந்து நேர்முகமான தெளிவு எதுவும் அவர்களுக்குக்கிடையவும் கிடையாது.

எல்லாம் கடவுள் வாய்மொழி என்று நம்புவதற்கு ஆதாரமாயிருப்பதெல்லாம் "ரிஷி வாக்கியங்கள் என்பவை

களும்'' புராணங்கள் என்பவைகளும், கடவுள் அருள் பெற்ற வர்கள் என்பவர்கள் சொன்னார்கள் என்று எழுதி வைக்கப் பட்டவைகளும்தான். ஆனால் அவை நம் கண்ணெதிரே மனிதர்களாலேயே எழுதப்பட்டு, மொழி பெயர்க்கப்பட்டு, அச்சிடப் பெற்றதையும் பெறுவதையும் பார்க்கிறோம்

ஓ! ஆஸ்திக நண்பனே! வேதங்களையெல்லாம் கடவுள் ரிஷிகளுக்கு உபதேசம் செய்ததாக நீ நம்புகிறாயே ஒழிய கட வுள் அவ்வாறு உபதேசம் செய்ததாக கடவுள் உன்னிடம் நேரில் சொன்னது கிடையாதே, நீ பார்த்ததும் கிடையாதே. வேதங்களெல்லாம் கடவுள் வார்த்தையென்று யாரோ சொன் னதைத்தானே நீ நம்பிக்கொண்டிருக்கிறாய்.

ஆனால் உண்மையில் ''ரிஷிகள்'' யாரென்றும் உனக்குத் தெரியாது. வேதங்களை எழுதியவர் யாரென்றும், எப்பொழுது என்றும் நீ அறியாய்? வேதங்களை மொழிபெயர்த்ததும் தொ குத்ததும் கூட இன்னார் என்றும் உனக்கு நேரில் தெரியாது.

எனவே, உனக்குத்தெரியாத—யாரோ சிலர் சொல்வதை ஆதாரமாகக் கொண்டு வேதங்களெல்லாம் தேவவாக்கென்று நீ நம்புகிறாய்; ஆகவே, வேதங்கள் தேவவாக்கல்லவென்று நான் மறுப்பதனால் அது தேவவாக்கை நான் மறுத்ததாக எப்படி ஏற்படும்; ஒருக்காலும் ஏற்படவேமாட்டாது. மனித வாக்கை மறுப்பதாகவேதான் ஏற்படும்.

ஆனால் நாஸ்திகர்கள் வேண்டுமென்றே ஏதோ துர் எண் ணத்தின் பேரில் வேதசாஸ்திரங்களை மறுப்பதாக ஆஸ்திகர் கள் பழி சுமத்துகிறார்கள். அதிலுள்ள உண்மை என்னவெ னில், நாஸ்திகன் தனதுபகுத்தறிவுக்குச் சரி என்றும் உண் மையென்றும் பட்டதை மாத்திரம்தான் நம்புகிறான். மற்ற படி சாமான்ய ஜனங்கள் கைக்கொண்டொழுகும் மதங்கள் அவனது பகுத்தறிவுக்குப் பொய்யென்று தோன்றுவதாலும் அந்தப்படி தோன்றும் மதம் மக்களுக்கு எவ்வித நன்மையை யும் பயக்காதென்றும், தீமையே பயக்கும் என்றும் அவன் நம்புவதானாலும் அனுபவத்தில் காண்பதனாலும் நாஸ்திகன் அதை அடியோடு மறுப்பதோடு எதிர்க்கவும் செய்கிறான்.

அன்றியும் தன் பகுத்தறிவுக்குச்சரியெனத் தோன்று பவைகளை வெளிப்படையாகக் கூறி, அவைகளை பகிரங்க மாய் பிரசாரம் செய்யும் நாஸ்திகன் மிக ஒழுங்காகவே நடக்

கிறான். இவ்விஷயத்தில் ஒரு போப்புக்கோ, அல்லது ஒரு மதாச்சாரியர்களுக்கோ உள்ள பெருமை அவனுக்குமுண்டு.

தவிர நாஸ்திகர்கள் எல்லாம் சுயநலக்காரர், நெறியற்றவர்கள் என்று குறை கூறுவதானது சிறிதும் புத்தியற்றவர்கள் கூற்றாகும்.

ஏனெனில், அப்படிச்சொல்வதானது "அபேதவாத(சோஷியலிஸ்டு, தலைவர்களெல்லாம் சுயநலக்காரர்கள் நெறியற்றவர்கள்" என்று குறை கூறுவதற்கு ஒப்பாகவே இருக்கிறது.

உண்மையில் நாஸ்திகர்களையும் சோஷியலிஸ்டு தலைவர்களையும் ஜனங்கள் ஆதரிப்பதுமில்லை, மதிப்பதுமில்லை. அன்றியும் பழிக்கவும் வெறுக்கவும் செய்கிறார்கள். ஆகவே, பொதுஜன மதிப்பு இல்லாத இந்தப் பழியினாலும் வெறுப்பினாலும் நாஸ்திகர்களுக்கு என்னவிதமான சுயநலமோ, லாபமோ பெருமையோ இருக்கமுடியும்?

"ஜாதிப் பிரஷ்டனாகவோ, பொது ஜன மதிப்பை இழக்கவோ, பொருள் நஷ்டமடையவோ, இழக்கப்படவோ நீ இஷ்டப்பட்டால் மாத்திரம் நாஸ்திகன் அல்லது சோஷியலிஸ்டு எனப் பெயர் எடுப்பாயாக" என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, இதில் ஒரு மனிதனுக்கு சுயநலம் இருக்குமா?

எனவே, நாஸ்திகத்தினால் ஒருவன் எத்தகைய இலாபமும் அடையமாட்டான், நாஸ்திகன் எனப் பெயரெடுப்பது ஒரு மனோகரமானதும் கீர்த்தி அளிப்பதுமான செயலுமல்ல.

"வேத உண்மை"யை மறுப்பவர்களுக்கெல்லாம் நாஸ்திகப் பட்டம் சூட்டுவது, தன் நீங்காக் கடமை என ஆஸ்திகன் நம்புகிறான்.

கடவுளைக் காப்பாற்றுவதும், நாஸ்திகனைப் பழிவாங்குவதும் தன் கடமை என ஆஸ்திகன் கருதுகிறான். எல்லா மதக்காரர்களும் அவ்வாறே எண்ணுகிறார்கள்.

இந்தக் குரூர நம்பிக்கையினால் உண்டான போர்கள் எத்தனை! 'கடவுளைக் காப்பாற்ற'ப் புறப்பட்டவர்களால் கொல்

லப்பட்டவர்கள் எத்தனை! சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எத்தனை! ஹிம்சிக்கப்பட்டவர்கள் எத்தனை!

இந்த மூடசாம்பிராணிகளின் பாதுகாப்பை விரும்புமாறு "கடவுள்" அவ்வளவு பலயீனமானவரா? தன்னை எதிர்க்கப் பட்டவர்களைக் கொல்லவும் பழிவாங்கவும் இயலாது கூலிகளை நியமிக்கவேண்டியவாறு அவர் அவ்வளவு சக்தியற்றவரா?

கடவுளைக் காப்பாற்ற ஆத்திரம் கொள்ளும் ஆஸ்திக நண்பனே! நாஸ்திகரிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும் நீ கொண்டுள்ள வெறுப்பு எவ்வளவு கொடுமையானதென்று நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உலக நாகரிகத்தின் உண்மைச் சரித்திரந்தான் யாது? அவிசுவாசிகளுடையவும் நாஸ்திகர்களுடையவும் வெற்றியே உலகத்தின் உண்மைச் சரித்திரமாகும். அவர்கள் பொய் நம்பிக்கைகளை மறுத்ததனாலேயே உண்மை வெளியாகி உலகம் நாகரிகம் பெற்று வருகிறது.

அக்காலத்தில் வாழ்ந்த ஆஸ்திகக் கொள்கையுடைய "புண்ணிய சீலர்கள் உண்மையை வெளியாக்கப் பாடுபட்ட அவிசுவாசிகளையும், நாஸ்திகர்களையும் நிந்தனை செய்தார்கள், சித்திரவதை செய்தார்கள், ஹிம்சித்தார்கள், கன்னெஞ்சத்தோடு கழுவேற்றினார்கள், கொலை புரிந்தார்கள். "அந்த ஆஸ்திகர்களின் சந்ததிகளோ கர்ண பரம்பரைச் செய்திகளையெல்லாம் உண்மையென நம்பினார்கள். ஆனாலும் அவைகளைத் தைரியமாய் மறுத்துக் கூறி இறந்து விட்ட "அவிசுவாசிகளை"யெல்லாம் இப்போதும் வாழ்த்துகிறார்கள். ஆனால் இப்போது உண்மையை விளக்குவதற்குப் பாடுபட்டுக்கொண்டு உயிருடனிருக்கும் "அவிசுவாசிகளை"யெல்லாம் குற்றம் சொல்ல முயற்சித்தார்கள்.

சூரிய மண்டல உண்மைகளை முதன்முதல் வெளியிட்ட கோபர்நிகஸ் சமுதாயப் பிரஷ்டரானார். இப்பொழுதோ பூமி சூரியனைச் சுற்றி வருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். முன் நிந்திக்கப்பட்ட கோபர்நிகஸ் பெயரும் இப்போது போற்றப்படுகிறது.

ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் ஒவ்வொரு சூரியனுக்கு ஒப்பானது என்று முதன்முதல் கூறிய புருனோ தீக்கிரையாக்கப்பட்டார்.

வான சாத்திர உண்மைகளை வெளியிட்டு, பாதிரிகள் குருட்டு நம்பிக்கைகளையொழித்த காலிலியோ சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார்.

இப்பொழுது அதே கிறிஸ்தவர்கள் காலிலியோ கூறியவைகள் எல்லாம் உண்மையென்று ஒப்புக்கொள்கிறார்கள். அவரது பெயரும் இப்போது உலகத்தில் மதிப்புப் பெற்றிருக்கிறது.

இவ்வண்ணம் ஆராயப் புகுந்தால் அவிசுவாசிகள்-நாஸ்திகர்கள் என்பவர்கள் கூறியவைகளே உண்மையென்றும், விசுவாசிகள்-ஆஸ்திகர்கள் என்பவர்கள் கூறுபவைகள் பொய்யென்றும் விளக்கப் பதினாயிரக்கணக்கான திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டலாம்.

இப்போது நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாக வைதீகர் பின்னோக்கிச்சென்று கொண்டே இருக்கின்றனர். காலஞ்செல்லச் செல்ல விஞ்ஞான சாத்திர உண்மைகளை (சையன்ஸ்) ஆத்திகர்களும் வைதீகர்களும் ஒப்புக்கொண்டு தான் வருகிறார்கள்.

எனினும் "உண்மை நம்பிக்கையுடையவர்கள்" அல்லது ஆத்திகர்கள் நாத்திகர்களை வெறுக்கிறார்கள்; நாத்திகர்களைத் தூற்றாமலிருப்பதில்லை; தூற்றுவதைத் தம் முக்கிய கடமை என்றும் நம்புகிறார்கள்.

டார்வின் சாஸ்த்திரியார் கொள்கைகளை நாத்திகக் கொள்கை, மூடக்கொள்கை என்று வெறுத்தவர்கள் இப்பொழுது அந்த பரிணாமவாதத்தை சந்தோஷமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உண்மை ஆராய்ச்சியாளரை 200 வருஷ காலமாகச் சித்திரவதை செய்தும், கொலை புரிந்தும், வந்த ஆத்திகன் இன்னும் திருப்தியடையவில்லை.

மதப்புரட்டுகளையும், வேதப்புரட்டுகளையும், புராணப் புரட்டுகளையும், ஒழிக்க முன்வருகின்றவர்களை நாத்திகர்கள்

என்று ஆத்திகன் இப்பொழுதும் கூறிக்கொண்டுதானிருக்கிறான்.

உதாரணமாக, கிறிஸ்தவர் அல்லாத பெண்களும் புருஷர்களும் எரிநரகத்திலாழ்ந்து தவிப்பார்கள் என்று கிறிஸ்தவர்கள் கூறுவது வழக்கமாக இருந்தது. அது மூடநம்பிக்கையென்று எடுத்துக்காட்டினால் அவர்களுக்குப்பிடிக்க வில்லை.

ஞான ஸ்நானம்பெறாத குழந்தைகள் எல்லாம் நரகம் புகுவார்கள் என்று கிறிஸ்தவர்கள் நம்பியிருந்தார்கள். அது மூட நம்பிக்கை என்று கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

மந்திர வாதத்திலும் சூனியத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது. ஆயிரக்கணக்கான மந்திரவாதிகளையும் சூனியக்காரர்களையும் அவர்கள் நெருப்பிலிட்டுக் கொளுத்தினார்கள்.

இப்பொழுது மந்திரவாதத்தைப்பற்றிப்பேசினால் அதே கிறிஸ்தவர்களுக்கு வெறுப்புண்டாகிறது. மந்திரவாதிகளை அஞ்ஞானிகள் என்கின்றார்கள்.

ஆதாம், ஏவாள், பிரளயம் முதலிய புராணக் கதைகளை அவர்கள் நம்பினார்கள். இப்பொழுதோ அவைகள் எல்லாம் உபமான கட்டுக்கதை என்று கூற முன்வந்து விட்டார்கள். ஆறு நாட்களில் உலகம் உண்டுபண்ணப்பட்டதென்று அவர்கள் நம்பினார்கள். இப்பொழுது பூகர்ப்ப சாத்திரக்கொள்கைகளை மெல்ல மெல்ல ஒப்புக்கொள்கிறார்கள்.

ஓ ஆஸ்திக நண்பர்களே!

நாத்திகம் என்னப்பட்டவைகளே இப்பொழுது வைதீகமாக இருக்கின்றன என்று நீங்கள் உணரவில்லையா? நாஸ்திகன் என ஹிம்சிக்கப்பட்டவர்கள் கூறியவைகள் எல்லாம் இப்பொழுது உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டு விடவில்லையா? இன்று அவைகளைப் பள்ளிப்பிள்ளைகளுக்குப்பாடமாக பாதிரிமார்களாலேயே கற்பிக்கவில்லையா?

தற்காலம் உண்மையென நம்பப்படுபவைகளை முன்னூறு வருடங்களுக்கு முன் யார் கூறியிருந்தாலும் அவர்கள் அப்பொழுது கொல்லப்பட்டே யிருப்பார்கள் அல்லவா? எனினும்

ஒரு நூற்றாண்டுக்குப்பின் உண்மையென ஒப்புக்கொள்ளப் படுபவைகளை முன்னாடியே கூறுவோரை நீ நாஸ்திகன் என்று அழைக்கிறாய்.

சரித்திரத்திலிருந்தும் விஞ்ஞான சாஸ்திரத்திலிருந்தும் நீ ஒரு படிப்பினையும் கற்றுக்கொண்டாயில்லை.

நேற்று நம்பத்தகாததாயிருந்தது இன்று நம்பத்தக்க தாய் விட்டதை நீ உணர்கிறாயில்லை.

இன்று நம்பத்தகாததாயிருப்பது நாளை நம்பத்தக்கதா வதும் நிச்சயம்.

சுதந்தரமாகச் சிந்தனை செய்து சுதந்தரமாகப்பேசிய அவிசுவாசிகளாலேயே உலக நாகரிகம் உருப்பெற்றிருக்கிறது. உருப்பெற்றும் வருகிறது.

அவர்கள் உயிருடனிருந்தபொழுது அவிசுவாசிகள் என்றும் நாஸ்திகர் என்றும் வெறுக்கப்பட்டார்கள். ஆனால், இப்பொழுதோ அவர்கள் எல்லாம் உலக நன்மைக்காக உழைத்த புண்ணியாத்மாக்களாக மதிக்கப்படுகிறார்கள். இன்றைய நாஸ்திகர்களும் பெரிதும் அப்படித்தானாவார்கள்.

ஆஸ்திக நண்பர்களே! நம்மவர்களில் எத்தனையோ உத்தமர்கள் இந்தப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே நீர் கூறும் பழிப்புரையைப் புன்னகையுடன் ஏற்றுக்கொள்கிறோம். ''கடவுளைக் காப்பாற்ற''ப் போராடும் சிறு வீரரே! நாங்கள் உம்மிடம் கோபம் கொள்ளவில்லை; உம்முடைய அறிவீனத்தையும் ஆத்திரத்தையும் கண்டு இரங்குகிறோம்.

———)o(———

சிற்சில விஷயங்கள் எல்லோருக்கும் ஒன்றுபோலவே காணப்படா.

பார்ப்பவருடைய வதுய, ஆராய்ச்சி, அனுபவம், சார்பு, அவருக்கு அதனிடத்தில் உள்ள பற்றுதல், துவேஷம், 'விருப்பு' வெறுப்பு ஆகிய வைகளுக்கு ஏற்றாற் போல் தான் காணப்படும்.

ஈ. வே. ரா.

வருங்காலச் சந்ததியார்கள்.

என்னே மனிதனின் மதியின் அளவு! அவனால் ஒருஅற்ப அணுவைக்கூட சிருஷ்டிக்கமுடியாது; ஆனால் பத்துலக்ஷ கணக்கான கடவுள்களை உற்பத்தி செய்கிறான். தன்னுடைய வாழ்நாளில் நடக்கும் சம்பவங்களை முன்னதாகச் சொல்லக் கூடிய குறி சொல்லுகிறவனைத் தண்டிக்கிறான்; ஆனால், மரணத்திற்கு பின் அவனுக்கு நடக்கக்கூடிய சம்பவங்களைச் சொல்லுகிற மதக்குருக்களுக்கு சன்மானங்கள் வழங்குகிறான். பைபிளை (கிறிஸ்தவ வேத புஸ்தகம்) யாராவது கட்டுக்கதை என்று சொன்னால் சிரச்சேதம் செய்கிறான்; அப்புஸ்தகத்தைக் கடவுளின் கட்டளை என்று சொல்லுகிறவனைப் பின்பற்றுகிறான். புல்லுருவியைப் போல், பிறர் உழைப்பில் தன்னுடல் நோவாமல், அவர்கள் இரத்தத்தை அட்டை போல் உருஞ்சித் தன் வாழ்வை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, தனக்கு உதவி செய்யக்கூடியதும், தன்னுடைய சுகம் கெடாமல் இருக்கத் தேவையதுமான சிறந்ததும் உடல் வலு குன்றாத கொழுத்ததுமான குதிரை, மாடு, ஆடு, நாய், தேனீ முதலியனவற்றை ஏராளமான பணச் செலவில் வெகு ஜாக்கிரதையோடு கேவலம் அம்மிருகங்களை வளர்க்கிறான்; ஆனால், தன் சோம்பேறிச் சுகவாழ்க்கையை நடத்த எண்ணங் கொண்ட அவன் ஏழைத் தொழிலாளிகளாகிய இராஜங்கப் பிரஜைகளின் ஜீவ நாடியாகிய செல்வத்தை, தனது ஆடம்பர வாழ்க்கையை நடத்துவதற்காக, அடிமைப் படுத்தி தன் இஷ்டம்போல் அச்செல்வங்களை அனாவசியமாக செலவு செய்துக்கொண்டும் (இங்கிலாந்தில்) 10ல் 1 பாகம் ஜனத்தொகை அறிவு, பலம் முதலியவைகள் குறைந்தவர்களாக செய்துக்கொண்டும் வருகிறான். அவன் பலமுள்ளவர்கள் பலமற்றவர்களோடும், தகுதியானவர்கள் தகுதியற்றவர்களோடும், ஆற்றலுள்ளவர்கள் ஆற்றலற்றவர்களோடும் சேர்ந்து சந்ததி விருத்தி செய்யும்படி தூண்டுகிறான். இதனால் அவர்களது சந்ததியார் பலமற்றவர்களாயும், அறிவற்றவர்களாயும் இருந்து வருகிறார்கள். இதற்குச் சான்று, இப்பொழுது போலீஸ் படைக்கு மனுப்போடும் 100 பேர்களில் 95 பேர்கள் மனோநிலையோ உடல் பலமோ அற்றவர்கள் என்று நீக்கப்பட்டு விடுகிறார்கள்.

ஜனசமுதாய வாழ்க்கையிலே முட்கள் போல் திகழ்கின்றனவாகிய—பஞ்சம், கர்ப்பச்சிதைவு, சிசுக்கொலை, செல்வத்தின் உயர்வு தாழ்வு, அற்ப ஆயுள், வரிப்பளுவின் மிகுதி, இங்கிலாந்தில் உள்ள 20 லக்ஷம், ஏன் உலகத்திலே உள்ள 300 லக்ஷம் வேலை இல்லாதார்களின் தொல்லை, நடந்த யுத்தங்கள்—நடக்கின்ற யுத்தங்கள், இன்னும் இது போன்றவைகளுக்கு மூலகாரணம் என்ன என்பதை துருவிப் பார்த்தால், அதிக ஜனத்தொகை (over population) என்பது நன்கு தெரியக் கிடக்கிறது.

உலகத்தின் ஜன சங்கை அதிகப்படாமல் தடுப்பதற்கு மேல்கண்ட சம்பவங்கள் இயல்பாகவே வளர்வன என்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது. முறையான (Normal) ஜனத்தொகை உலகில் இருப்பதற்காக இயல்பாகவே போட்டிக்காரர்களைப் பற்களாலும் நகங்களாலும் கொன்று ஜனத்தொகையை சமப்படுத்தி, ஆகாரத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களின் நிலையை பாதுகாத்துவந்திருக்கிறார்கள். இம்முறை, இன்று, புலி, கழுகு முதலிய மிருகங்களிடத்திலும், கருங்காலி, முட்செடி முதலிய தாவரங்களிடத்திலும் இருந்து வருகிறது இது இயற்கையின் அறியாமை எனலாம். ஆனால், அதுதான் தகுதியான முறை—பல்லாயிர வருஷங்களாக ஆதிமனிதர்களும், சிறிது நாகரீகம் அடைந்தவர்களும் கையாண்ட முறையாகும். ஜனப்பெருக்கம் அதிகரித்த இப்பொழுதும் இம்முறையானது ஊக்மாகக் கையாளப்பட்டு வருகிறது.

கடைசியாக நாகரீகம் வாய்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிற மக்களில் கற்றவர்கள் என்று கருதப்படுகிற சிறு பான்மையான மக்கள், இம்முறையை நிறுத்தி வேறு மார்க்கம் தேட முற்பட்டார்கள். அப்படி அவர்கள் தேடிப்போகும்போது 'காப்பத்தடை' என்ற முறையை கண்டுபிடித்தார்கள். இந்த இரண்டு வார்த்தைகளும் பெற்றோர்கள் தங்களது பகுத்தறிவால் கர்ப்பாதாரணத் (Conception)தை பின்பற்றினால், அவர்களால் பிறக்கும் குழந்தைகள் ஒரே அளவாயும், திட சரீரமுள்ளவர்களாயும், சந்தோஷத்தை அனுபவிக்கிறவர்களாயும், பொதுவாக அவர்களுக்கும், அவர்களது பின் சந்ததியார்களுக்கும் நன்மையை உண்டுபண்ணுவதற்கு ஆகவே நோக்கமாக அவ்வார்த்தைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சார்லஸ் ப்ராலா, அன்னி பிஸண்டு ஆகியவர்களின் தீரமும்,

தியாகமுமே இக்கர்ப்பத்தடையானது இன்று இவ்வுலகில் நிலவுவதற்கு காரணமாகும். அவர்கள் இல்லையானால் தோழர் ஜஸ்டிஸ் மெக்கார் டியும், இன்று இளம்பெண்களை விவாகம் செய்து கொடுப்பதற்கு முன் அவர்களுக்கு கர்ப்பத்தடையின் முறைகளை கற்பித்துக்கொடுக்க வேண்டும் என்று சொல்லத் துணிந்திருக்க மாட்டார்; பக்மாஸ்டர் பிரபுவும் ''கர்ப்பத்தடையானது மனித வர்க்கத்தை உயர்த்துவதற்கே யொழிய அழிப்பதற்கல்ல'' என்று கூற முனைந்திருகக மாட்டார்; அல்லது பார்னஸ் அத்தியட்ச குருவும் தன்னுடைய ஜனங்களை நோக்கி ''உங்களது பிறப்பு விகிதத்தை ஓர் அளவு படுத்த வேண்டும் இல்லையேல் ஜனத்தொகை அதிகரித்து அழிவு ஏற்படும்'' என எச்சரிக்கத் துணிந்திருக்க மாட்டார.

பகுத்தறிவில்லாமல் 'சால்வேஷன் ஆர்மி' (Salvation army)பில் சேர்ந்த கன்னியாஸ்திரீகளாலும், லண்டன் அத்தியட்ச குருவாலும் எவ்வளவு எதிர்ப்பிரசாரம் செய்தாலும் பிரபுக்கள் சபையில் இதை த்தடுக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சியெடுத்தும், இம்முறையானது-இக்கர்ப்பத்தடையானது இன்று குதூகலத்தோடும் ஆடல் பாடலோடும் ஜனங்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

தோழர் ப்ராங்வோயிட் அவர்களால் எழுதப்பட்ட கர்ப்பத்தடையும் அதன் மறுப்பும் என்ற புத்தகத்தில் இக்கர்ப்பத்தடையானது மனிதர்களால் கண்டு பிடிக்கப்பட்ட நூதனமானவைகளில் இது ஒன்று. நெருப்பு அச்சு இயந்திரம் முதலியனவைகளைக்கண்டுபிடித்ததைவிட இதுவிசேஷமானதாகும். இம்முறையை எதிர்க்கிறவர்கள் இப்புஸ்தகத்தை ஒரு தடவை படிக்க நேரிட்டால் அவர்கள் வாதம் எத்தகையது என்பது விளங்கும். பின் சந்ததியார்கள் இதைப்பற்றி என்ன எண்ணுவார்கள்?

இனி வரப்போகும் உலகத்திலே குறைவான பாதிரிகளும், சேனைகளும் இருக்கும்; மேலும், போர்களும் தேவையற்ற குழந்தைகளும் காணப்படமாட்டது. அப்பொழுது, நமது பின் சந்ததியார்கள் இத்தகைய முற்போக்கான தேசநலத்துக்குரியதும், சமூக முன்னேற்றத்திற்குரியதும் ஆன முறையைத் தடுத்தவர்களை எள்ளி நகையாடாமல் இரார். அது எதைப்போன்றிருக்கிறதென்றால், சூரியனுடைய சலனங்களைப் பற்றியும், கிரகங்களைப்பற்றியும், அடிமை வியாபாரத்

தை ஒழிக்க முயற்சித்ததையும், சூனியக்காரர்களை அளிக்க நினைத்ததையும், ரணசிகிச்சை செய்யும்போது நோயின் கடுமை தெரியாமலிருக்க மயக்க மருந்து கொடுக்க ஆரம்பித்த காலையிலும் மதத்தலைவர்களால் எதிர்ப்புகள் வராமலில்லை ஆனால், அவைகளை லட்சியம் செய்யாமல் உலகம் மாறுதல் அடைந்துக்கொண்டே வந்திருக்கிறது. அப்படி எதிர்த்தவர்களை நாம் இன்று எவ்வளவு அறிவுள்ளவர்களென்று மதிக்கிறோமோ அது போல் தான் நமது பின் சந்ததியார்களும் இவர்களைப்பற்றி நினைப்பார்கள். இது தவிர, இப்பிரச்சினையைப் பற்றி தேசிய வாதிகள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவலைப்பட வேண்டியதில்லை. நாளடைவில் சில தேசிக வாதிகள்மனம் மாறி அவர்களே இம்முறை சிறந்தது என்பதாக கண்டிப்பாய் ஒப்புக்கொண்டே தீருவார்கள். அறிவாளர்களான லார்டுபக்மாஸ்டரும், காலஞ்சென்ற தோழர் ஜஸ்டிஸ் மெக்கார்டியும், தீவிர மதவாதியாளர்களாகிய பார்னஸ் இன்ஜும், வைத்திய நிபுணர்களாகிய லார்டு ஹோர்டரும் டாக்டர் டிரைஸ்டாலும், பெண்களிலே டாக்டர் மேரிஸ் டோபஸ் டாக்டர் மேரிடென்ஹாமும், இன்னும் இவர்கள் போன்றவர்களும் இக்கர்ப்பத்தடையைப் பற்றி ஆதரித்தும் சிறப்பித்தும் கூறியிருப்பதைக்காணும்போது பகுத்தறிவாளர்களுக்கு இம்முறையானது எவ்வளவு செல்வாக்குப்பெற்று வருகிறதென்று மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது தோழர் பிராங்க் வொயிட்டால் எழுதப்பட்ட புத்தகமானது தயதாக்ஷண்ணியமில்லாமல் கர்ப்பத்தடையைக் குறித்து நியாய தோரணையாக விவாதித்து எழுதப்பட்டிருக்கிறது. இம்முறையைப்பற்றி பேசுகிறவர்களும் எழுதுகிறவர்களுமான வைத்திய விற்பனர்கள் ஒவ்வொருவர்களின் கையிலும இருக்கத்தக்கதாகும். இதை கண்ணுற்றால் தாங்கள் எதிர்த்து எழுதியதைக் குறித்து மனஸ்தாபப் படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. பாதிரிகளும் இதை ஒரு தரம் பார்வையிட்டால் அவர்களும் தங்களது அறியாமையை உணர்வார்கள்.

அப்புஸ்தகத்தின் கண்ணுள்ள 5-குறிப்புகள் மிக முக்கியமானதும் யோசிக்க வேண்டிய அவசியத்தைக் கொடுக்கக் கூடியதுமாகும். அவை பின் வருமாறு:—

1. இங்கிலாந்திலும் வேல்சிலும் 1066ல் ஒரு சதுரமைலுக்கு 26-ஜனங்களும்; 1801-ல் 153-ம் இப்பொழுது 685க்கு மேல் இருக்கிறார்கள்.

விவாகமான தம்பதிகளுக்கு இனத்தைப்பற்றிய அறிவு (Sex knowledge) ஏற்படுவதற்கு முன், எல்லா வகுப்பாரின் குடும்பமும் அதிகரித்துக்கொண்டுவந்தது, ஆனால் இன்று இவர்களின் குடும்பம், தங்களது வசதி, ஓய்வு, கல்வி கற்பிக்கக்கூடிய சக்தி முதலியவற்றிற்கு ஏக்கவாறு விருத்தியாகிறது. 1911-ல் இங்கிலாந்தில் 55 வயதிற்குள் விவாகமான 1000 தம்பதிகளாகிய உயர்ந்த, சாதாரண வகுப்பாருக்குள் பிறப்பு 119 ம் தேர்ச்சியுள்ள தொழிலாளிகளுக்குள் 153-ம்; தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்குள் 213.மாம்.

இதற்காக சமூக விஷயத்திற்கு ஆக செலவிடுவது ஒரு வருஷத்திற்கு 1891-ல் 20,00 ,000-பவுன்; இப்பொழுதோ 400,000,000-பவுன. ஒன்பது குழந்தைகளையுடைய ஒருவன் 600 பவுனும், பன்னிரண்டு குழந்தைகளையுடையவன் 790 பவுனும் வரி செலுத்துவோர் பணத்தில் இருந்தும் பெற்றுவந்திருக்கிறான்.

எங்கு பிறப்பின் தொகை குறைகிறதோ அங்கு மனித ஆயுள் அதிகரிக்கிறது. உதாரணமாகக் கர்ப்பத்தடை ஏற்படுவதற்கு முன் சாதாரண ஆயுர் 40; ஆனால் அதற்குப்பின் 62-ஆகும்.

கர்ப்பச்சிதைவு என்பது நாகரீகம் வாய்ந்தது என்று சொல்லப்படுகின்ற நாடுகளிலும் வெகு ஏராளமாக இருப்பதைக் காணலாம். ஜர்மனியிலே ஒரு வருஷத்தில் 800,000 கணக்கில் கர்ப்பச்சிதைவு நடந்துவருகிறது. தோழர் மேரீஸ் டோபஸ் சொல்வதாவது "மூன்று மாத காலத்திற்குள் கர்ப்பச் சிதைவு குற்றம் என்பதையறியாத பெண்கள் சுமார் 20000 பெண்கள் வரை என்னிடத்தில் கர்ப்பச்சிதைவுக்கு மனுச்செய்திருக்கிறார்கள்" இதைப் பார்க்கும்போது இங்கிலாந்திலே அது, ஜர்மனியைவிட அதிகமென நினைக்கவேண்டியிருக்கிறது. ஷோவியத்ரஸ்யாவில் இம்மாதிரி கர்ப்பச்சிதைவு பண்ணுவது ஒழுங்கற்றது என்று அறிந்திருக்கிறார்கள்; ஆனால் அரசாங்க டாக்டர்களால் 3-மாதத்திற்குள் கர்ப்பச்சிதைவு பண்ணிக்கொள்வது சட்டவிரோதமல்லவென்று நினைக்கிறார்கள். மேலும் ஒரு தடவை கர்ப்பத்தடை புத்தியோடு கையாளப்பட்டால் கர்ப்பச்சிதைவு என்ற பிரச்சனையானது மறைந்துபோகும் என்றும் ஷோவியத் சர்க்கார் நினைக்கிறார்கள். ரஷியாவில் தற்போதைய குடியாட்சி ஆரம்பிப்பதற்குமுன் கர்ப்

சமயமும் விவாகமும்.

விவாக சம்பந்தமாக பொது ஜனங்கள் எவ்வளவு தூரம் மதச்சடங்குகளை நீக்கி முன்னேற்றமடைந்து வருகிறார்கள் என்பதை பகுத்தறிவாளர்கள் காண திருப்தியடையாமலிருக்க முடியாது. வருஷந்தோறும், கோயில்களிலோ, சர்ச்சிலோ அல்லது மற்றமதஸ்தாபனங்களிலோ நடக்கவேண்டிய விவாகங்களைமக்கள் ரிஜிஸ்டர் ஆபீஸ்களில் நடத்தத்துணிவு கொண்டுவிட்டார்கள். ரிஜிஸ்டர் ஆபீஸ்களில் பதிவாகும் விவாகங்கள நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இதைப்பற்றி மெத்தாடிஸ்ட் சர்ச்சு மகாநாட்டுத்தலைவர் சமீபத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ரிஜிஸ்டர் திருமணங்களைக் கண்டித்து வெளிப்படையாக வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார். மற்றும், மற்ற அனேக மதத்தலைவர்களின் மன அமைதியின்மையையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். மதத்தலைவர்களும் குருக்களும் இன்னும் அது சம்பந்தப்பட்டவர்களும் இத்திருமணங்கள் மதச்சடங்கற்றதென்றும், முற்றிலும் கிறிஸ்துவ மதக் கட்டளையை அவமதித்து நடந்து வருகின்றன என்றும் முணுமுணுக்கிறார்கள். பொது ஜனங்கள் விவாகம் நடத்தும் விஷயத்திலே மத சம்பிரதாயத்தை கைவிட்டு வரப்படும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருவதைக் காண மதத்தலைவர்களுக்குக்கோபம்வருவது சகஜமே. ஆனாலும், இனிமேல் மதக்கட்டுப்பாடுகளும் திட்டங்களும் ஆதிக்கம் செலுத்தமுடியாது என்றும், அவர்கள் முயற்சி இனி சிறிதும் பயன் பெறப் போவதில்லை என்றும் அவர்கள் நன்கு அறிதல் வேண்டும். இல்லாவிட்டால் பெரியதொரு ஏமாற்றமடைவார்கள். (லண்டன் பகுத்தறிவுப் பத்திரிகை.)

———)o(———

பச்சிதைவால் 1000-க்கு 199-பேர்கள் நோயால வருந்தினார்கள். அதில் 1000-க்கு 40-பேராக இறந்தார்கள். ஆனால் தற்போதைய ஆட்சி ஆரம்பித்ததிலிருந்து அவ்வெண்ணிக்கை குறைந்து நோயால் வருந்துபவர்கள் 1000-ல் ஒன்றே; அதிலும் இறப்போர் தொகை 1000-ல் 0,04 ஆகும்.

வெள்ளை ருஷியா.

சோவியத் புரட்சி ஏற்படுமுன் ருஷியர் நிலைமை!

சோவியத் ருஷியாவைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப் படாத அறிவாளிகளில்லை. அவர்களைக் கண்டு அருவருப் போ, அச்சமோ அன்றி, பின்பற்றி நடப்பதற்குப் பிரியமோ கொள்ளாத சர்க்கார்களும் இல்லை. இன்றைய அரசியல்வாதி களும், தேசியத் தலைவர்களும், அறிவாளிகளும், ருஷியா வின் நடவடிக்கைகளில் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார் கள் என்றால், அந்த ருஷியாவைப்பற்றி, தமிழ்மக்கள் தெரிந் துகொள்ளவேண்டுவது அவசியமல்லவோ?

இன்றையதினம் இந்தியா சட்டசபையில் நடைபெறும் கிரிமினல் திருத்தச்சட்ட மசோதாகூட பொதுவுடமையை எதிர்த்துப் போராடுவதற்கு மிக்க அவசியமானது என்று சர்க்கார் கூறுகிறார்கள். இந்தப் பொதுவுடமை ஆக்ஷிதான் சோவியத் ருஷியாவில் நடைபெறுகிறது. ஆனால், சோவியத் சர்க்கார், முன்னரிருந்த நிலைமையும் பின்னர் பொதுவுடமை ஆக்ஷியின் பயனாய் அவர்கள் பெற்ற பேறும் என்னவென்று கவனிப்போம்.

சோவியத் ருஷியாவின் தலைமை நகரம் மாஸ்கோ. இந்த நகரத்தின் சரிதையே ருஷிய சரிதையின் சாரம் என்று சொல்லலாம்.

மாஸ்கோ ஆரம்பம்.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர், ருஷிய சிற்றரசன் ஒருவன் மாஸ்கோ நகரத்தில் தனது வாசஸ்தலத்தை ஏற் படுத்தினான். அவ்விடத்தில் சில குடிசைகளும், அக்கா லத்திய அரசனுக்கு வேண்டிய சில கட்டிடங்களும்மாத்திரம் இருந்தன. இந்தச் சிறு கிராமத்தைத் தனது வாசஸ்தலமாக ஏற்படுத்தியதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவது அந் நியர் படையெடுத்து வராதபடி தடுப்பதற்கு, இக்கிராமத்தைச்

சுற்றிலும், கொடிய மிருகங்களையுடைய அடர்ந்த காடுகளிருந்தன. இரண்டாவது, காட்டிலகப்படும் திரவியங்களைச் சேர்த்து, வியாபாரம் நடத்துவதற்கு மிகவும் வசதியானது. எனவே நாள் பல செல்லவும், இங்கு ஏராளமான ஜனங்கள் குடியேறினர். அரசனுக்கும் ஐசுவரியம் பெருகிற்று. அது கண்டு பொறாமையுற்ற தார் தார் ஜாதியினர் இந்த மாஸ்கோ பட்டணத்தின்மேல் 13-ம் நூற்றாண்டில் படையெடுத்து, ருஷிய மன்னனைத் தோற்கடித்தார்கள். இத் தார் தார் ஜாதியினர்க்கு கட்டுப்பட்டவர்களாய், 150-வருஷ காலம் வரை ருஷிய மன்னர்கள் கப்பம் கட்டி வந்தனர் என்றாலும், 15-ம் நூற்றாண்டில் ருஷியர்கள் வீறு கொண்டு எழுந்து, தார் தார் ஜாதியினரை ஜயித்து, விடுதலை பெற்றார்கள்.

ஒரு சிறு கிராமமாயிருந்த மாஸ்கோ, ஜனத்திரள் அதிகமாகி பட்டணமாக மாறியது. எனவே நகரை இரு பிரிவுகளாகப் பிரிக்கும்பொருட்டு 12-ம் நூற்றாண்டில் ஒரு மரச்சுவர் கட்டப்பட்டது. இச்சுவரிற்குள்ளாக மன்னனும், அவனைச் சார்ந்த குழுவினர், உயர்குல மக்களெனப்படுவோரும் வதிந்தனர். சுவரிற்கு வெளியில் எழைத் தொழிலாளியும், கீழ் வகுப்பாரும் வசித்தனர். 14-ம் நூற்றாண்டில், இச்சுவர் பழுதுபட்டுவிட்டதால், அப்போதிருந்த "பணப்பை ஐவன்" என்ற மன்னன் ஒன்றரை அடி அகலத்தில், ஓக் மரத்தினால் சுவர் கட்டி முடித்தான். ஆனால் 1418—1516 வரை அரசு புரிந்த 3-வது ஐவன், மரச்சுவற்றை அப்புறப்படுத்தி, இத்தாலியச் சிற்பிகளைக் கொண்டு கற்களினால் ஒரு கோட்டைச் சுவர் எழுப்பினான். இந்தச் சுவரையும், பிற கட்டிடங்களையும் இன்று கூட மாஸ்கோவில் பார்க்கலாம். இவைகளைத்தான் கிரம்ளின் என்று வழங்குகிறார்கள். முன்னர் ருஷிய சாம்ராஜியத்தின் தலை நகரமாக விளங்கிய கிரம்ளின் இன்று ஐக்கிய அபேதவாத சோவியத் குடியரசு அரசாங்கத்தின் பிரதான நகரமாக விளங்குகிறது.

காளடைவில் வியாபாரம் பெருக ஆரம்பித்தது. நகரமும் விருத்தியடைந்தது. கிரம்ளின் பலம் பொருந்திய கோட்டையாக மாறியது. அரசர்களும் சாம்ராஜ்ஜியம் ஏற்படுத்த முனைந்து நின்றனர். கிரம்ளினைச் சுற்றிலும், வியாபாரிகளும், செல்வந்தர்களும், இளவரசர்களும், போர் வீரர்களும், பாதிரிகளும், தொழிலாளிகளும் கூடி ஏராளமாக நிறைந்துவிட்டார்கள், எனவே கிரம்ளின் கோட்டைச் சுவரை இன்னும் விஸ்தரிக்கவேண்டியதாயிற்று. ஆனால் பணம் படைத்

வர்களுடனும், உயர்ந்த வகுப்பார்களுடனும் தொழிலாளியையும் பாமரர்களையும் சேர்ந்து வாழ அனுமதித்தால், கௌரவம் குலைந்து, உள் நாட்டுக்குழப்பமும் கூட நேரிட்டுவிடுமென அச்சம் கொண்ட அரசன், வேறொருவித ஏற்பாடு செய்தான். கிரம்ளின் கற்சுவருக்கு வெளியில் மற்றொரு சுவர் எழுப்பப்பட்டது. (இதன் பெயர் சீனச் சுவர்) சீனச் சுவரிற்குள்ளாகத் தனவந்தர்களும், மேல் வகுப்பார்களும் மட்டுமே வசிக்கலாம். அச்சுவரிற்கும் வெளியில்தான் தொழிலாளரும் பிறரும்வாசஞ் செய்யவேண்டும். ஆகவே மாஸ்கோ நகரம் மூன்றாவது நிலைமையை அடைந்தது.

அரசரும் மக்களும்.

இவ்விதம் மாஸ்கோ நகரம் தினே தினே அபிவிர்த்தியடைந்ததென்றாலும் மக்களின் நிலையில் எவ்வித முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் சொல்லமுடியாது. ஆரம்பமுதல் இதுவரையிலும் வகுப்பு வேற்றுமை இருந்து வந்ததென்பதும், இதை அடிப்படையாகக் கொண்டே பல தடைவைகளிலும் சுவர்கள் சட்டப்பட்டனவென்பதும் தெளிவாகத் தெரிகிறது. கிரம்ளினின் முன்பாக இருந்த மைதானத்தைச் சுற்றிலும் பல திறப்பட்ட கடைகளும், மதுபானக்கடைகளும், பெரியதும் சிறியதுமான பல ஆலயங்களும் இருந்துவந்தன. இங்கு ஜனத்திரள் அதிகம். நீண்ட கம்பளி ஆடையை அணிந்துகொண்டு அவசர நிமித்தமாக அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கும் வியாபாரிகளையும், குளிருக்குப் போர்த்திக்கொள்ளவும் ஆடையின்றிப் பசி தாங்கமாட்டாமல் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களையும்; அதே சமயத்தில் பணத்திமிர் படைத்தோர், மிதமிஞ்சிக் குடித்துக் களித்து பனி விழுவதுங்கூட உணராதபடி மேலாடையை நழுவ விட்டுவிட்டு மதிமயக்கத்துடன் கடப்பதையும் காணலாம். ஒருவர் பின் ஒருவராய் பல ஸார் அரசர்கள் ஆக்ஷி செய்தாலும், மக்கள் நிலையில் மாற்றம் ஏற்பட்டதாகச் சொல்லமுடியாது. இவர்களிடத்தில் வித்தியாசம் பார்க்கமுடியாது. எல்லோரும் ஒன்று போலவே ஆட்சி செய்தது ஆச்சரியமேயாகும். ஆரம்பத்தில் இவர்களது ஆக்கினையை மீறுபவர்களையெல்லாம் தமது கரத்தாலேயே தண்டனை நிறைவேற்றி வைத்தார்கள். பின்னர் தமது முன்னிலையில் வைத்துப் போர்வீரர்களைக் கொண்டு தண்டித்துவந்தார்கள். கிளர்ச்சிக்காரர்களையும், குற்றவாளிகளையும், மத நம்பிக்கையற்றவர்களையும் சிரச்சேதம் செய்துவந்தனர். தினசரியும் எண்ணற்றோர் விண்ணுல

கடைவது இவர்களுக்கே சகிக்கக்கூடவில்லை சிரச்சேதம் செய்ய உபயோகித்த "மரயந்திரத்தையும் இந்த இடத்தை யும்" இன்னும் பராமரித்து வருகிறார்கள்.

அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பதவிக்கு வந்தது போலவே ஏராளமான குழப்பங்களும் ஏற்பட்டன. முதலாவது பீடர் காலத்தில் நடந்த ஸ்டிட்சி குழப்பம், புகாசேவ்கலகம் இன்னும் எத்தனையோ கலகங்கள் நிகழ்ந்தன ஒன்றாவது வெற்றி பெறவில்லை. குழப்பக்காரர்களெல்லாம், பிடிபட்டு, கொடுமையான தண்டனைக்குத்தான் ஆளானார்கள். உயிரு டன் தீயிலிட்டுக்கொளுத்தப்பட்டார் சிலர்; கழுத்துவரை பூமி யிற் புதைக்கப்பட்டு வாயில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றப்பெற் றனர் சிலர். இன்னும் சிலரை உயிரிருக்கத் தோலை உரித்தார்கள். இப்படிப்பட்ட விவரிக்கொண்ணாத கொடு மைகளுக்கு உள்ளானார்கள் சிகப்பு மைதானம் (ரெட்ஸ்குயர்) முழுமையும், தூக்கு மரங்களும், இறந்த பிணங்களைத் தொங் கவிடும் கம்பங்களும்தான் நிறைந்திருந்தன. 1727-ல் இரண் டாவது பீட்டர் காலத்தில்தான் இவைகளை அப்புறப்படுத் தினார்கள்.

மாஸ்கோவின் பரிதாபமான நிலை.

1703-ம் வருஷத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பெரிய பீட்டர் என்ற அரசன், மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் நெருங் கிய வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்பினான். இதற்குச் சௌகரியமாக மாஸ்கோவிலிருந்த சர்க்கார் காரியா லயங்களை எல்லாம், பால்டிக் கடற்கரையிலுள்ள செயிட் பீடர்ஸ் பார்க்கிற்கு (இப்போது லெனின் கிரேட்) மாற்றிக் கொண்டான். ஆனால் மாஸ்கோ நாட்டின் நடுவில், கீழ்நாட் டுக்குச் செல்லும் சாலையின் மேல், சமீபமாகவிருந்ததால், நா ளுக்கு நாள் அபிவிருத்தியடைந்தது. சர்க்கார் காரியாலயங்க ளில்லாவிட்டாலும் பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கியது; பாதிரிகளும், ஆலயங்களும் மடங்களும் நிறைந்து, மத பீட மாய் விளங்கியது; இதுபோலவே குடிக்கும், கூத்திக்கும் உறை விடமாய் இலங்கியது. மாஸ்கோவைப்பற்றி, ருஷிய சக்கர வர்த்தினியே, தனது அக்தரங்கக்கடிதம் ஒன்றில் குறிப்பிடு வதாவது:—மாஸ்கோ ஒரு சோம்பேறிமடம். பணம் படைத் தோன் சூதாடுமிடம்! அங்கு எங்கு பார்த்தாலும் சரி, பாதி ரிகள், ஆலயங்கள், மடங்கள், பிச்சைக்காரர்கள், திருடர்கள், வேலையின்றி அவதிப்படுவோர், ஏழைக்குடிசை, அசுத்தம் குடிகொண்ட செல்வவான் வீடு இவைகளையே பார்க்கலாம்!!

இந்தச் சக்கரவர்த்தினியும், பிற அரசர்களும், இக்குறையை நிவர்த்திக்க தக்க முயற்சிகள் எடுத்ததாகக்கூறமுடியாது. எடுத்தாலும் வெற்றிபெறவில்லை என்பது முக்காலும் திண்ணம். ஒருவன் வீட்டுக்கு வெளிச்சமிருக்கக்கூடாது என்பதற்காக, போக்குவரத்துக்குத் தடையாய், நடுத்தெருவில் பெரிய ஒரு ஆலயத்தைக் கட்டுவதென்றால்,பாதிரிகளின் ஆதிக்கம் இருந்தவாறென்னே! எண்ணற்ற பேர்கள் வயிற்றுக்குக் கஞ்சியின்றி தெருவில் நின்று வாடும்போது, ஆயிரக்கணக்கானவர்கள் மடங்களில் நன்றாய் உண்டு களித்துச் சமூகத்திற்கு எவ்வித பிரயோஜனமுமின்றி வாழ்ந்து வந்தார்கள் என்றால், மக்களின் மடமையை என்னென்பது?

இத்தனை பாதிரிகளிருந்தும், இத்தனைமடங்களிருந்தும், மக்களிடம், சூதாடும் குணமும் குடிப்பழக்கமும் இருந்து வந்தது. நாள் முழுதும் சூதாடிக்கொண்டிருந்துவிட்டு, ஏமாற்றிப் பணம் பறித்தோனும, ஏமாறிப் பறிகொடுத்தோனும் பின்னும் இணைபிரியாமல், பக்கத்திலுள்ள மதுக் கடையில்புகுந்து கள்ளருந்தி அயர்வார்கள் மயக்கம் ஏற்படும் வரை குடிப்பதுவே அவர்கள் வாடிக்கை. "குடம் குடமாய்க் குடியாவிட்டால் குடியின் இன்பம் தெரியாது"—மகிழ்ச்சியால் மதிமயங்க மதுவையுண்—என்பன பழமொழியாக வழங்கின. அம்மதுபானக் கடைகளிலேயே, நாடோடிப் பெண்களும், விபசார மகளிரும், குறி சொல்வோரும் குழுமியிருந்து மீந்த பணத்தைக் கொள்ளை கொள்வார்கள்.

டால்ஸ்டாய்.

இத்தகைய பரிதாபகர நிலையிலுள்ளவர்களுக்கு எவரேனும் உதவி செய்ய முன்வரவில்லையா என்று கேட்பீர்கள். முயற்சித்த மக்கள் மத நம்பிக்கையற்றவர்களென்றும்,அராஜகர்களென்றும், குழப்பக்காரர்களென்றும், குற்றவாளிகளாகப் பாவிக்கப்பட்டுக் கொடுமைக்குட்படுத்தப்பட்டார்கள். கௌண்ட்லியோ டால்ஸ்டாய் என்ற பெரிய தனவந்தரும் கூட, ஏழை எளியவர்களுக்குத் தன்னாலியன்ற பொருளுதவியைச் செய்தும் மேல்வகுப்பார்,தொழிலாளர்களிடமும்,பாமர ஜனங்களிடமும் கிருபையுடையவர்களாய் அன்பு மனத்தினர்களாய், தர்மகர்த்தாக்கள் போல் நடந்துகொள்ளவேண்டுமென்று பிரசாரமும் செய்தார். ஆயினும் என்? இத்தகைய பரிதாபகரமான நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் மதக் கோட்பாடும், பணக்கார ஆதிக்கமும் தலைவிதி என்பனபோன்ற

குருட்டுப் பழக்க வழக்கமுமாயிருக்க: ஒரு சில தனிப்பட்ட நபரால், அன்றி ஒரு சிலரால் சீர்ப்படுத்திவிடுவதென்பது முடியாத காரியம். சமூகக் கட்டுப்பாட்டில், அனுபவிக்கப் பிறந்தவன், வேலை செய்யப்பிறந்தவன் என்றக் குருட்டுத் தலைவிதிக் கொள்கையை அறவேயொழித்து நாட்டில் யாவருக்கும் சம, சொத்துரிமையும், உற்பத்தியிலும் விநியோகத்திலும் சமபங்கும் கொடுக்கப்பட்டாலன்றி, இந்நிலை மாறாது என்பது துணிபன்றோ?

நகர மாந்தரில் பெரும்பான்மையோர் "தரித்திர நாராயணர்" களாய், சுகாதாரமற்றவர்களாய் வயிற்றுக்குக் கஞ்சியற்ற நிலையில், எலும்பும் நரம்பும் இலங்கும் உடல் படைத்தவராய் இருக்கும்போது; இவர்களுடையக் கல்வியைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ? சுகாதாரமான வீடுகளையும், வீதிகளையும், விளக்குகளையும், பார்க்குகளையும், பார்பர் ஷாப், வண்ணார ஷாப் முதலிய பிற சௌகரியங்களையும் பார்க்கக்கூடுமோ?

ஒடுக்கமான வீதிகளும், குறுகலான சந்துகளும் நிரம்பிய மாஸ்கோவில் போக்குவரத்துச் சாதனத்தைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. மார்க்கட்டுகளும் அதிகமில்லை. உள்ளவையும் இருள் சூழ்ந்து அழுக்குப்படிந்து அசாதாரணத்திற்கு நேர் விரோதமானமுறையில் இருந்துவந்தன. நகர பரிபாலன சபையில் சுகாதார இலாக்கா என்று ஒன்று தனியாகவில்லையென்றால் சாக்கடைத்திட்டம் பற்றி என்ன சொல்லவேண்டியிருக்கிறது. பொது ஜனங்கள் குடி தண்ணீருக்குக்கிணற்றை நம்பவேண்டியவர்களாயிருந்துங்கூட, அவைகளைச் சரிவரப் போற்றிவந்ததாகக் கூறமுடியாது.

புரட்சி.

1917-ஹூ்த்தில் பொதுவுடமைகாரர்களின் புரட்சி சமயத்தில் மாஸ்கோ இருந்த நிலை மிக்க கேவலமானதாகும். கிரம்ளின் கோட்டை வெகுப்லமாக பந்தோபஸ்து செய்திருந்தார்களென்றாலும், விடுதலை பெறவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்பொதுஜன சமூகம் வீறுகொண்டெழுந்தபோது, எந்தக் காவற்படைதான் என்ன செய்யமுடியும்? எப்பேர்ப்பட்ட இரும்புக்கதவுதான் திறக்காமல் இருக்கமுடியும். பொதுவுட

மைக்கக்ஷியினருள் 500, பேர் வரை உயிர் துறக்க நேரிட்டா லும் வெகுசீக்கிரமாகக் கிரம்ளினைக் கைப்பற்றிவிட்டார்கள். அன்று முதல் இன்றுவரை, கிரம்ளின் கோட்டை பொதுவுட மைக்காரர் வசமே இருந்துவருகிறது.

கிரம்ளின்.

மாஸ்கோவில் இன்றையதினம் மிக முக்கியமாகக் கருதப் படுவது கிரம்ளினேயாகும். இன்றைய பொதுவுடமைச்சர்க்கார் காரியாலயமெல்லாம் அதிலேயே இருக்கிறது. இது முக் கோண வடிவமாயுள்ளது. ஒரு மைல் சுற்றளவும், 19 கோபு ரங்களும், பல வாசல்களும் உடையதாய்ப் பார்க்க வெகு அழ கானதாய் விளங்குகிறது. இதனுள் பழங்காலத்திய ஆலயங் கள் பல இருக்கின்றன. அவற்றுள் மிகப்பழமையானது. "உஸ்பென்ஸ்கி கதிட்டரல்" என்பது, இது 1775ல் 9-ம் அரிஸ் டாட்டில், பிரனாரண்டோ என்ற சிற்பிகளால் ஐரோப்பாவில் சிறந்து விளங்கும் பைஸாண்டின், ரோமன், காதிக் என்ற மும்முறைகளுக்குமிணங்க செவ்விதாய்க் கட்டி முடிக்கப்பெற் றது. இதற்கு அடுத்த "ஆர்ச் என்றால் கதீட்டரல்" என்று ஒன்றுண்டு. இது 1505-ல் கட்டப்பட்டது. இதில் தான் "பயங்கரம் ஐபவன்" உடையவும், இன்னும் பல அர சர்களுடையவும் சமாதிகளிருக்கின்றன.

கிரம்ளினில் பார்க்கத்தக்க சரித்திர சம்பந்தமான மற் றொன்று, பழய போர் அரசனின் ஆயுதசாலையும், பொருட் காட்சிச் சாலையும் ஆகும். மன்னர் குடும்பத்தினர் உபயோ கித்த ஆடை ஆபரணங்கள், பண்ட பாத்திரங்கள் யாவும் இங்கு பந்தோபஸ்தாக வைக்கப்பெற்றிருக்கின்றன. அக்காலத் திய பெரிய பீரங்கிகள், நீண்ட துப்பாக்கிகள், நெப்போலிய னிடம் கைப்பற்றிய பீரங்கிகள் முதலியவற்றை இங்கு காண லாம்.

கிரம்ளினிலுள்ள ஆலயங்களுக்கிடையே பல அரண்ம னைகளிருக்கின்றன. பாட்ரிபார்க் அரண்மனை, கிரான்பி தாய அரண்மனை, பெரிய கிரம்ளின் அரண்மனை—முதலா னவை பிரசித்திபெற்றவை. சக்கரவர்த்தினியின் பொன் அறை, பெண்கள் விடுதி, முதலியவை, பெரிய கிரம்ளின் அரண்மனையில் ஒரு பகுதியாகும். இன்னும் சில சரித்திரம் பூர்வமான இடங்களும் இருக்கின்றன. எல்லாவற்றையும் வெகு சிரத்தையோடு பராமரித்து வருகிறார்கள்.

கிரம்ளினுக்கு வெளியே, பிரம்மாண்டமான செயின்ட் பேசில் ஆலயம் இருக்கிறது. இது 1564-8 வருஷங்களில் பயங்கரம் ஜவன் என்பவன் ஆக்ஷிகாலத்தில் கட்டப்பெற்றது. இதைக்கட்டி முடித்த ருஷிய சிற்பி, இதனிலும் அழகானமற்றொரு ஆலயம் கட்டாமலிருப்பதற்கு அவனது கண்களைப் பிடுங்கி விட்டதாக, ஒரு புராணக்கதையுண்டு. சிகப்பு மைதானத்தின் மற்றொரு புறத்தில், ருஷியக்கலையின் மேம்பாட்டை விளக்குகின்ற சித்திரச்சாலை இருக்கிறது.

மற்றுமுள்ள பழங்கட்டிடங்களில் இரண்டு நாடகசாலைகளையும், தனவந்தர்களின் மாளிகைகளையும் குறிப்பிடலாம். இவைகளில் பலவற்றில் பொருட்காட்சிச் சாலை வைத்து நடத்துகிறார்கள். சரித்திர சம்பந்தமற்றதும், சாதாரணமானதுமான பிறவற்றையெல்லாம் இடித்துத் தகர்த்து விட்டார்கள்.

மாஸ்கோவிலுள்ள ஆபரணக்காட்சியில் பழய காலத்திய மன்னர்களும், ராணிகளும் அணிந்த ஆபரணங்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். இவைகளைப்பிரபலஸ்தர்கள் மட்டுமே பார்க்க முடியும். சித்திரப்படக்காட்சிச் சாலையில் வெகு அபூர்வமான படங்களையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

பழைய ஸார்காலத்திய ருஷியாவைப்பற்றி இவ்வளவு தான் கூறவியலும். அடுத்தபடியாகப் பொதுவுடமை ஆட்சியில் முன்னேற்றமடைந்து வரும் சிகப்பு ருஷியாவைப்பற்றிக் குறிப்பிடுவோம்.

———)o(———

நீ உன்னுடைய அன்பை ஒரு புரோகிதன் மூலமாக உன் மனைவிக்கு செலுத்தக் கூடுமாயின், உனது அன்பை ஒரு புரோகிதன் மூலமாகக்கடவுளுக்கு செலுத்தக்கூடும்.

H. G. உவெல்ஸ்.

சிகப்பு ருஷியா.

அடர்ந்த காடுகளுக்கிடையே மாஸ்கோ நகரை நிர்மாணித்ததற்கு, அதன் இடவசதியே காரணமாகும். பல பக்கங்களுக்கும் செல்லும் சாலைகள் கூடுமிடமாய், நாட்டின் நடுமத்தியில் அமைந்திருப்பதால், அது வெகு விரைவில் பெரிய நகரமாக மாறியது. வியாபாரமும் பெருகியது. அப்படியிருந்தும், ஐரோப்பிய தேசங்களுடன் ராஜிய, வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொள்வதற்கென்று பெரிய பீடர் 1703ல், பீடர்ஸ் பர்க்கை தலைநகரமாக மாற்றிக்கொண்டது மாபெருந்தவறுதலேயாகும். பொதுவுடமைக்கட்சியினர் அதிகாரத்திற்கு வந்ததும், ஒரு சிறிதும் தயக்கம் கொள்ளாமல் மாஸ்கோவையே தலைநகரமாக வைத்துக்கொண்டார்கள். ஏனெனில் இவர்களின் லக்ஷியம் பொது ஜன சௌகரியம், உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்தி, சமூக முன்னேற்றம் முதலியவைகளே. நாட்டின் மத்தியிலுள்ள மாஸ்கோதான் இதற்கு வசதியானது!

ஆனபோதிலும், பொதுவுடமைஆட்சி ஏற்பட்ட சமயத்தில் மாஸ்கோ இருந்த சீர்கேடான நிலைமையைப்பற்றி ஏற்கெனவே முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆதலால் இந்நகரத்தைச் சீர்படுத்தி, புதுப்பித்துக் கட்ட ஆவல் கொண்ட பொதுவுடமைக்காரர்களிடையே பலத்த அபிப்பிராய பேதமிருந்தது. மாஸ்கோ திருத்தி அமைப்பதென்பது கூடாதகாரியம் என்றனர் ஒரு சிலர். திருத்தியமைப்பதற்குச் செலவாகும் திரவியத்தைக்கொண்டு, பழைய மாஸ்கோவைக் காட்சிப்பொருளாக அப்படியே விட்டு விட்டு, அதன் அருகிலேயே வேறு ஒரு நகரம் நிர்மாணித்து விடுவது சுலபம் என வேறு சிலர் கூறினர். மற்றுஞ்சிலர் மாஸ்கோவை நிர்மூலம் செய்து விட்டு அவ்விடத்திலேயே புதிதாகக் கட்டலாம் என்றாகள். இவ்விதம் ஒரு முடிவிற்கு வரக்கூடாமலிருந்தாலும் இதனிலும் முக்கியமானதும், அவசரமானதுமான அரசியல், பொருளாதார, சமூகப்பிரச்சினைகள் பலவிருந்தமையாலும் மாஸ்கோ நகர புனருத்தாரண அல்லது நிர்மாணவேலையை 1931 வரை ஒத்திப்போட்டுவிட்டார்கள்.

இருந்தாலும் 1918ம் ஹூ முதற்கொண்டு சில நிர்மாண வேலைகள் நடந்து கொண்டுதானிருந்தன. அப்படிச்செய்தும் நெருக்கடி தீர்ந்தபாடில்லை. 15 லட்சம் பேர்கள் வசித்து வந்த ஒரு நகரத்தில் 25 லட்சம் பேர்கள் சகல சௌகரியங்க ளுடனும் வசிக்க வேண்டுமானால், போதாக்குறைக்குச் சர்க் கார் காரியாலயங்களும் அங்கு வேலை பார்க்கும் அதிகாரிக ளுக்கு விடுதிகளும் வேண்டியிருந்தால், எவ்வளவு சிரமமாக விருந்திருக்கும் என்று யோசித்துப்பாருங்கள்.

கைத்தொழில் நகரம்.

மேலும் மாஸ்கோ தலைமை நகரம் என்பது மட்டும் இல்லை. அது கைத்தொழில்களுக்குப் பீடமாக மாறியது. பெரிய பெரிய ஆலைகளெல்லாம் ஏற்பட்டன. 1917-ல் நடந்த தொழிலைப் போல் $3\frac{1}{2}$-மடங்கு 1932-ல் நடந்தது, 1932-ல் 6-மடங்கு நடந்தது! 1934-ல் 8-மடங்கு நடந்தது; புதுக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், சீர்திருத்தவும் ஏராளமான ரூபி ள்கள் செலவாயிற்று. 1935-ல் மாத்திரம் மாஸ்கோ நகர சபையார் 1,600,000,000 ரூபிள்கள்கட்டிடங்களுக்காக ஒதுக் கிவைத்திருக்கிறார்கள்.

பெரிய மாறுதல்.

சில வருடங்களுக்கு முன்பு மாஸ்கோவைப் பார்த்தவர் கள், இப்போது பார்த்தால் அப்படியே பிரமித்து நின்று விடுவார்கள் என்பது திண்ணம். அத்தனை மாறுதல்களை இன்று அங்கு காணுவார்கள். மண் படிந்த, ஒடுக்கமான ரோடுகளை இன்று பார்க்கமுடியாது. வீதிகள் எல்லாம் விசாலமாக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் தார் போட்டு, வெகு சுத்தமாகக் கவனித்துவருகிறார்கள். ஆற்றி னிருபுறங்களையும் கற்களால் கட்டி, நல்ல மரங்களை வளர்த்து வருகிறார்கள். மைதானங்களை நிரப்பிக்கொண்டிருந்த பழைய ஆலயங்களைப் பார்க்கமுடியாது அங்கெல்லாம் சர்க்கார் காரியாலயம் அதிகாரிகளின் விடுதிகளிருக்கின்றன. முன்னர் இருள் சூழ்ந்து, பார்க்க பயங்கரமாயிருந்தவிடங்கள் இன்று எலக்டிரிக் விளக்குகளின் வெளிச்சத்தில், வெகு அழ காக விளங்குகின்றன.

ஜனங்களின் இன்ப வாழ்வு.

சோவியத் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து ருஷிய மக்கள் கவ லையற்றவர்களாய்ச் சந்தோஷகரமான வாழ்க்கை நடத்திவரு

கிறார்கள். முன்னர் பாதிரியும், பணக்காரரும் நிறைந்திருந்த மாஸ்கோவில், இன்று உள்ளவர் எல்லோரும் தொழிலாளர்களே. புரட்சிக்குமுன் 148000 தொழிலாளரிருந்தனர். இன்று 800000 தொழிலாளர் இருக்கின்றனர். இவர்களது வாழ்க்கை வெகு இன்பம் நிறைந்ததாயிருக்கிறது. மற்ற எல்லா தேசத்திலும் உள்ள தொழிலாளர்கள் ருஷியத் தொழிலாளர்களைக்கண்டு பொறாமைப்படத்தான் வேண்டும். மாஸ்கோவில் சாஸ்வதமாகவுள்ள 40 நாடக சாலைகளிலும், தினசரியும் 40000 தொழிலாளர்கள் கூடுகிறார்கள். மற்றும் இவர்களுக்கென உள்ள 200 சங்கங்களில் சங்கீதக் கச்சேரி, தேக் கச்சேரி, பிரசங்கங்கள், மற்றும் பல வேடிக்கைகள், கேளிக்கைகள் எல்லாம் நடக்கின்றன. நாடக சாலைகளும், சங்கங்களும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. 1931-ல் 3.01 நாடகங்கள் நடந்திருக்க 1934-ல் 6000 நாடகங்கள் நடைபெற்றன. நாடகம் பார்ப்பவரின் எண்ணிக்கை 5-லட்சம் அதிகரித்திருக்கிறது. 193-ம் வருஷத்தில், மாஸ்கோ நகரத்தில் 6638 பிரசங்கங்கள், 10,000-பேச்சுப் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன என்றால் ருஷியர்களின் இன்ப வாழ்க்கைதானென்னே!

மக்களின் சுகாதாரமும், ஒழுக்கமும்.

சிறிதும் சுகாதாரமற்று, வெகு க்ஷீண நிலையில் இருந்த மாஸ்கோ இன்று சுகாதார நிலைமையில், உலகில் மற்ற நகரங்களுக்கு வழி காட்டியாக நிற்கிறது. மகாயுத்த காலத்தில் மாஸ்கோவின் ஜனன விகிதமும் மரண விகிதமும் சமமாகவிருந்தது. இன்று 3,600,000 ஜனத்தொகை கொண்ட மாஸ்கோ, வருடமொன்றுக்கு 25000-பேர்கள் விகிதம் அதிகரித்து வருகிறது. அதாவது, மாஸ்கோவின் ஜனத்தொகை 1000-க்கு 7-பேர் வீதம் அதிகமாகிறது. நியூயார்க் பட்டணத்தில் 1000-க்கு 5 பேர் விகிதமும், லண்டனில் 2-பேர் விகிதமும் பாரிஸில் ½-விகிதமும் தான் அதிகமாகிறது.

பேர்லினில் தற்போது மரண விகிதம், ஜனனத்தைவிட ஜாஸ்தியாயிருக்கிறது.

கைத்தொழில் வளர்ச்சி.

மாஸ்கோவின் கைத்தொழில் வெகு வேகமாக முன்னேற்றமடைந்து வருகிறது. முன்னர் மூலப்பொருள்களை விறறு

வந்த மாஸ்கோவில் இன்று உலோக உற்பத்திச் சாலைகளும், இயந்திர உற்பத்திச் சாலைகளும், விமான உற்பத்திச் சாலைகளும் சில்லரை இரும்புச்சாமான உற்பத்திச்சாலைகளும் எண்ணிக்கையிலடங்கா. விவசாய மாஸ்கோ இன்று தொழில் மாஸ்கோவாக விளங்குகிறது. ஜவுளி, ஜோடு முதலான பொருள்கள் 1917-ல் உற்பத்தியானதுபோல் 24-மடங்கு இப்போது உற்பத்தியாகின்றன. மாஸ்கோவில் தயார்செய்யப்படும்! பொருள்களின் விலை மதிப்பு, 3,600,000,000 என்று 1934-ல் கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்வருடம் இத்தொகை 2 மடங்காகும் என்பதில் ஐயமில்லை.

மாஸ்கோவில் இன்றையதினம் சுறு சுறுப்புணர்ச்சியே தென்படுகிறது. எப்பக்கம் திரும்பினாலும், சாஸ்திர ஆராய்ச்சி நிலயம், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், புஸ்தகாலயங்கள், இங்கு பயிற்சி பெறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவர்களையே காணலாம். பழைய மந்த உணர்ச்சி சோம்பேறி வாழ்க்கையை இன்று காண்பது அரிது.

சோவியத் ஆட்சியில், ஜனங்கள் பெற்றுள்ள சௌகரியங்கள் அனந்தம். தரித்திரமென்றால், வீசை 1-க்கு விலை என்ன? என்று கேட்கும் நிலையில் இன்றைய ருஷிய மக்கள் இருந்து வருகிறார்கள். இவர்களிடம் பிச்சைக்காரர்களையோ, விபசாரம் செய்வோர்களையோ காண்டலரிது. அவர்களைப் பிடித்து வாட்டிவந்த குடிப்பழக்கம் அழிந்தொழிந்து விட்டதென்றே கூறவேண்டும். இன்றையதினம் குடியர்களைப் பார்க்கவேண்டுமானால், நகரின் மூலை முடக்குகளில் சிரமப்பட்டுத் தேடிப்பிடிக்கவேண்டும். அதுவும் ஏதாவது விசேஷங்களாய் இருக்கவேண்டும். சூதாட்டமும் மறைந்தொழிந்தது. மதுக் கடைகளும், சூதாடும் மடங்களும், விபசார விடுதிகளுமுள்ள மாஸ்கோவில் இன்றைக்கு ஏராளமான பெரிய ஹோட்டல்கள், வாசக சாலைகள், இன்னும் அறிவு வளர்ச்சிக்கான பல ஸ்தாபனங்கள், பொழுது போக்குக்கான அழகிய பார்க்குகள் முதலியவைகளையே பார்க்கக்கூடும்.

நவீன கஜினி.

மாஸ்கோ நகரில் இன்று எல்லாத்தேசத்தினரையும் காணலாம். நவீன "கஜினிப் பட்டணம்" என்று கூட அழைக்கலாம். ஆனால் அந்த கஜினிக்கும் இந்த மாஸ்கோவுக்குமுள்ள பெரிய வித்தியாசம் ஒன்றுண்டு. பழய மகம்மதுக்குச்

சொர்க்கமான, கஜினியில் நுழைந்த ஒவ்வொரு அன்னிய தேசத்தினர் அடிமையாக இருக்கவேண்டும். இன்றைய பொதுவுடமை மாஸ்கோவில் நுழையும் பிற நாட்டினர் அடிமையாய் இருந்தாலும், விடுதலையடைந்து, சுயேச்சையுடன் வாழ்கிறார்கள் என்பது துணிபு. மாஸ்கோவில் உள்ள பொருட்காக்ஷி சாலைகளில் சேகரிக்கப்பட்டுள்ள அனேக சாஸ்திர, கலாஞான நுட்பங்களைத் தெரியும் பொருட்டு, சகல் தேசத்தினரும், பல திறப்பட்ட அரசியல் கொள்கையுடையோரும் இங்கு வருகிறார்கள். சென்ற காலச் சிற்பத்தின் சிறப்பைக் கண்டானந்திக்கிறவர்களும், சோவியத் சாமான்களை வாங்க வருவோரும் அனேகர். ஏன், பல சர்க்கார்களிலிருந்தும் சோவியத் ஆட்சி முறையைத் தெரிந்துபோக வருவோரும், வியாபார உடன்படிக்கை சமாதான உடன்படிக்கை முதலியன செய்வதற்கு வருவோரும், எண்ணிக்கையிலர். சுருங்கச் சொல்லுமிடத்து, உலகத்தின் கவனம் முழுமையுமே, மாஸ்கோ நகரின்மீதுதான் பாய்ந்திருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்தில் மாஸ்கோ இன்னும் பன் மடங்கு பிரபல்யம் அடையும் என்பது திண்ணம.

10—வருடத் திட்டம்.

ஏற்கனவே பல பெரிய வேலைகளைச் செய்து, நகரை அபிவிருத்தி செய்திருந்தபோதிலுங்கூட, உலகில் முதன்மை வாய்ந்த சமதர்மக் குடியரசு ஆட்சியில் தலைமைப் பீடமாயிருப்பதற்குரிய சிறப்புகளை மாஸ்கோவில் இல்லையென்று சோவியத் அதிகாரிகள் கருதுகிறார்கள். மாஸ்கோ நகர் அபிவிருத்திக்கென்று ஒரு பத்து வருடத்திட்டம் போட்டிருக்கிறார்கள். இதை 3-வருடத் திட்டம், 7-வருடத்திட்டமென இரண்டுப் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இரண்டு திட்டங்களும் 1945-ஆம்-த்தில் முடிவடையவேண்டும்.

இத்திட்டத்தின்படி மாஸ்கோவிலுள்ள, சரித்திரப் பூர்வகமான கட்டிடங்களை மட்டும் அப்படியே வைத்துக் கொண்டு, மற்ற யாவற்றையும், தெருக்கள் மைதானங்களையுங்கூட, புது முறையில் திருத்தியமைக்கவேண்டுமென்பது ஏற்பாடு. இத்திட்டப்படி கட்டி முடிக்கப்பெறும். மாஸ்கோ நகரில், மானிட வர்க்கம் சிற்ப சாஸ்திரத்தில் அடைந்துள்ள வெற்றியைத் தெள்ளிதில் காணலாம். 50-லக்ஷம் ஜனங்கள் வசிப்பதற்கு வசதி செய்து வைக்கப்படவேண்டும். தற்சமயம் 28500 ஹெக்டேர் விஸ்தீரணத்தை 60000 ஹெக்

டேருக்கு விசாலப்படுத்தவேண்டும். (ஒரு ஹெக்டேர் $2\frac{1}{4}$-எக்கருக்கு சற்று குறைவு)—15,000,000 சதுரமீட்டர் பரப்பில் 2500 மாளிகைகளும், 4000 அறைகளையுடைய 6-ஹோட்டல்களும் கட்டி முடிப்பார்கள் இந்தப் பத்து வருடத்திற்குள் 400-மீட்டர் ரோடுகளை மோட்டார்போக்கு வரத்துக்குச்சௌகரியமாய் விசாலப்படுத்தவேண்டும். சாதாரண மோட்டார் 2650-ம், டிராலி பஸ் 1000, ஆடோபஸ் 1500 டாக்ஸி 2000-முமாக பெருக்கமடையவேண்டும் அடுப்பெரிக்க உபயோகிக்கும் "கியாஸ்" 600-லட்சம் கிலோமீட்டருக்கும், எலக்டிரிக் (உஷ்ண, சப்ளை 89000-லிருந்து 675,000 கிலோவாட்டுக்கும் உயர்த்தப்படவேண்டும்.

மேற்கண்டவைமாத்திரம் போதுமா? சோவியத் அதிகாரிகள் மக்களின் கல்வியில் விசேஷ கவனம் செலுத்துபவர்களாயிற்றே? பத்து வருட காலத்தில், மக்களின் மடமையை அகற்றி 100-க்கு 92-பேர் கல்வி பெறும்படி செய்து உலகத்தை ஆச்சரியப்படும்படி செய்தவர்கள் ஆயிற்றே? இந்தப் பத்து வருடத்திட்டப்படி, 550 புதிய பள்ளிக்கூடங்களும், 50 சினிமாக்களும், 3 யுவர் கலாஞான அரண்மனையும் ஒரு சிறுவர் கலாஞான வரண்மனையும், 7 சங்கங்களும் கட்டி முடிப்பார்கள். சிசு பரிபாலன நிலையங்கள், ரொட்டிக்கிடங்குள், சலவைச் சாலைகள் ஏராளமாக ஏற்படும்.

ஜனங்களுக்குச் சௌகரியம் செய்து தருவதில் மற்ற சர்க்கார்களைக் காட்டிலும், சோவியத் சர்க்கார் மிகச்சிரத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது மிகையாகாது. இன்றைய தினம், மாஸ்கோ உலகத்திற் முதற் பட்டணமாக (ஜனசௌகரியத்திற்கு, விளங்குகிறது. இன்னும் 10-வருடங்களில் இந்திர லோகமாக மாறிவிடுமென்பதற்கு என்ன சந்தேகம். 10 வருடத்திட்ட வேறு ஏற்கனவே ஆரம்பமாய்விட்டது. இவ்வருடத்திற்கு முடிவு பெற்ற, மாஸ்கோ சுரங்க ரயில்வேயைப் பார்த்தவரெல்லாம், பரவசமடைகிறார்கள். உலகிலுள்ள மற்ற சுரங்க ரயில்வேகள் எல்லாவற்றையும்விட, மிக அழகாகவும், அதிக சௌகரியங்களுடையதாயும், ருஷிய என்சினியர்கள் சிற்பத்திறமை உலகிற்கு எடுத்துக் காட்டுவனவாயும் விளங்குகின்றன.

மாஸ்கோ துறைமுகம்.

சோவியத் சர்க்காரின் பெரு நன்முயற்சிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, பத்து வருடத்திட்டத்திற்கு அடுத்தபடி

விதண்டாவாதம்.

ஒரு கிறிஸ்தவன் இந்துவாகிவிட்டால் உடனே அவனது பெற்றோர்களுக்குத் திதி—திவசம்—சிரார்த்தம் செய்யவேண்டும் என்று இந்து புரோகிதர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அந்த மதம் மாறியவனுடைய பெற்றோர்கள் உடனே இந்து பிதிர் லோகத்துக்கு வந்துவிடுவார்களா?

அல்லது கிறிஸ்துவ பிதிர் லோகத்திலேயே இருப்பார்களா?

இந்துக்கடவுள்கள் அவனை இந்துலிஸ்டில் தாக்கல் செய்து கொண்டு, அந்தப்படியான பாவ புண்ணியத்துக்கு ஏற்ற நரக மோக்ஷங்களில் இடம் ஒதுக்கிவிடுவார்களா?

ஃ ஃ ஃ

ஒரு பெண் கொஞ்சகாலம் குடும்பத்தில் இருந்து விதவை ஆகிச் சாப்பாட்டிற்கு வேறு மார்க்கமில்லாமலும், பராமரிப்

யாகக் குறிப்பிடவேண்டியதிரண்டுண்டு. லெனின் ஞாபகார்த்தமாகப் பெரிய சோவியத் அரண்மனை ஒன்று கட்டி வருகிறார்கள். அடுத்தபடியாக, மாஸ்கோ-வால்கா, கால்வாய் மும்முரமாய் வேலை நடந்துவருகிறது. இக்கால்வாய் 1937 ல் முடிவடையும். மாஸ்கோ நதியையும், வால்கா நதியையும் இக்கால்வாயால் பிணைக்கின்றார்கள். வால்கா நதி கருங்கடலில் சங்கமாகிறது. இம்மார்க்கமாக அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் கப்பல்கள், நேராக மாஸ்கோவிற்கு கிரம்லின் அரண்மனைக்குச் சில பர்லாங்கு தூரம் வரை வர முடியும்.

இத்திட்டங்களெல்லாம் முடிவடைந்தபின் மாஸ்கோவைக்கண்டு யார்தான் பொறாமையடையாதிருக்கக்கூடும்? எந்த ருஷியன் தற்பெருமை கொள்ளாதிருக்கவியலும்? இன்றுகூட ருஷியர்கள் மகா கர்வியாகவே இருக்கிறார்கள். அந்நியர்களையெல்லாம் அவர்கள் கேட்கிறார்கள். என்னவென்று கேட்கிறார்கள்? சமூகத்தில் ஏற்பட்டுள்ள குறைகளை, வெகு சேர்மையான முறையில் எங்களைப்போல் இவ்விதமாகக் களைந்துவிட்டு, மக்களின் நன்மையைத் தேடினவர்கள் வேறு யாராவதுண்டா?

———)o(———

புக்கு ஆளில்லாமலும் போனதால் கடவுள் பக்தி அதிகமாகி கடவுளுக்கு ஆக பொட்டுக்கட்டிக்கொண்டு நல்ல தேவதாசியாக ஆகிவிட்டால், அவர்களுக்கு விபசார தோஷமுண்டா?

ஃ ஃ ஃ

குடும்ப ஸ்திரீ விபசாரம் செய்தால் பாவம் ஏற்படலாம். தேவதாசி ஆஸ்திகர்களான தேவ பக்தர்களிடம் மாத்திரம் சம்பந்தம் வைத்துக்கொண்டால் பாவம் எப்படி வரும்.

ஃ ஃ ஃ

ஒரு பிறவி முஸ்லீம் இந்துவாகி விக்கிரகங்களை வணங்கினால் அவனைக்கடவுள் தண்டிப்பாரா? அல்லது கடவுள் தன்னுடைய லிஸ்டிலிருந்து அவன் பெயரை அடித்துவிடுவாரா.

ஃ ஃ ஃ

ஒரு பிறவி இந்து முஸ்லீம் ஆகி இந்து விக்கிரகங்களை உடைத்தெரிந்தால், இந்துக் கடவுள் அவனை தண்டிப்பாரா அல்லது இந்து லிஸ்டிலிருந்து அவன் பெயரை அடித்துவிடுவாரா?

ஃ ஃ ஃ

ஒரு நாஸ்திகன் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்து அதற்கு கடவுள் என்கின்ற பெயரே தெரிவிக்கப்படாமல இருந்து வளர்ந்துவந்தால் அப்பிள்ளை பெரியவனாகி தொழுகாததற்காவும், பிரார்த்தனை செய்யாததற்காவும் எந்தமதக்கடவுளாவது தண்டிக்குமா அல்லது "அவன் நம்ம லிஸ்டில் சேர்ந்தவனல்ல" வென்று கவனிக்காமல் விட்டுவிடுமா?

ஃ ஃ ஃ

அதுபோலவே ஒரு ஆஸ்திகன் சுயமரியாதைக்காரர் சாவகாசத்தால் நாஸ்திகனாகி உண்மையிலேயே அவன் மனதில் கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்றும், பாவ புண்ணியமென்பதெல்லாம் பணக்காரர்கள், புரோகிதர்கள் சுயநலத்திற்கு ஏற்படுத்திக்கொண்ட பித்தலாட்டம் என்றும் உணர்ந்து கடவுளைப் பற்றிக் கவலையில்லாமல் நடந்து கொண்டால் எந்தக்கடவுளாவது அவனைத்தண்டிக்குமா? அல்லது "அவன் தான் சுயமரியாதையில் சேர்ந்துவிட்டானே தொலைந்துபோகட்டும்" என் அசார்சமாய் விட்டுவிடுமா?

முதலில் புரோகிதம் ஒழியவேண்டும்.

ஐயா!.........மத ஏமாற்றங்களை உணர்ந்து தற்கால இளைஞர்கள் ஒருங்கே அவைகளை அருவருத்து எதிர்க்கின்றனர் என்பதில் ஐயமில்லை. என்றாலும் தலைமையாக ஒருவர் இருந்து இக்காரியத்தை முதன்முறை துணிவாகச் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் நின்று மத்தியஸ்தம் புரிவதற்காகத் தெய்வீகக் கட்டளைப்படி படைக்கப்பட்டதாகக் கூறிக்கொண்டு, குருக்களும் புரோகிதர்களும் பிறர் வசமிருந்து பறித்த முதலை வீண் செலவு செய்துகொண்டும் சோம்பித் திரிந்துகொண்டும் இருக்கின்றார்கள்.

இவ்விந்தியாவில் நெடுநாளாக மேற்கிளம்பிப் பொங்கி வழியாமல் உள்ளூரக் கொதித்துக்கொண்டு வந்த ஒரு உணர்ச்சியானது இப்பொழுது மேலே ததும்பி, இந்நாட்டை "சாபத்திலிருந்து" விலக்கி ஈடேற்றுமாறு எல்லா மதங்களின் இளைஞர்களும் முன் வந்து நிற்கின்றனர்.

மதத்தின் பெயரை வகித்துக்கொண்டு, பிடிவாத வெறி ஜன சமூகத்திற்கு இழைத்துள்ள தீமையை ஒருவாறு அறிந்துகொள்ள நாம் தேச சரித்திர நூல்களை ஆராய்ந்துபார்க்க அவசியமில்லை. அதாவது மனிதனுக்கு மனிதன் பகைமை கொள்ளுவதற்கு மண், பெண், பொன் ஆகிய மூன்று காரணங்கள் தாம் என்பது.

மதமே சமூக நாசம்.

இது ஒருவாறு உண்மையா மெனினும், எது முற்றிலும் உண்மையாய் இருக்கின்றதோ அது மறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பழமொழியை வழங்கியவர்கள் உண்மையைக் கூறுதற்குப் பயந்த கோழைகளாவர். ஏனெனில் மனிதனின் சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குங்கால், தன் மதத்தை அயல்மனிதன் மேல் வலியச் சுமத்துவதிலும், அயல் மனிதன் மதத்தை அடியோடு வேரறுப்பதிலுமேயே இவ்வுலகில் இரத்த வெள்ளம் ஓடியிருக்கிறது; அரும் பொருள் அழிக்கப்பட்டுள்ளது.

மண் பெண் பொன்னாசையால் இத்துணைச் சேதம் நேரவில்லை என்பது திண்ணம்.

ஆனால், எங்கெங்கத் தேசங்களில் மத நம்பிக்கை என்பது புறக்கணிக்கப்பெற்றுக்கைவிடப் பட்டதோ, அந்தந்தத் தேசங்கள் எல்லாம் முன்னேற்றமடைந்திருக்கின்றன தற்காலத்தில் இதற்குச் சான்றுகள் ரஷியா பிரான்சு, ஜப்பான், துருக்கி, சீனம், பாரசீகம் முதலிய நாடுகளாம். இத்தேசங்களில் பகுத்தறிவு உணர்ச்சி ஏற்படுவதற்கு முன், இத்தேசங்களில் வசித்து வந்தவர்கள் அவ்வுலக சுக வாழ்க்கையில் இன்பம் நுகர்வதற்காக இவ்வுலக வாழ்க்கையில் தமது உடலைத் துன்பப்படுத்திய பயங்காளிகளாய் இருந்தார்கள்.

இவ்வுலகத்தையே மோட்ச உலகமாக மாற்றிக்கொள்ள மனிதனுக்கு ஆற்றலுண்டு என்பதை மறந்திருந்தனர். பிற்காலத்தில், இறந்துபோன பின், ஒரு வாழ்க்கை இருக்கின்றது என்றும், அவ்வாழ்க்கையில் அடையக்கூடிய ஆநந்தம் அளவு கடந்தது என்றும், இவ்வுலக வாழ்க்கையில் துன்பப்படுவது தான் அவ்வுலக இன்பத்தை அடையும் வழி என்றும் புரோகிதர்கள் ஏமாற்றி வந்தார்கள்; இவ்வுலகத்தில் எவன் ஒருவன் இன்பம் அனுபவிக்கின்றானோ அவனுக்கு மீளா நரகவாதனை உண்டு என்றார்கள்.

எனவே, நாகரீகப் போக்கில் அடியெடுத்து வைக்கும் போழ்தெல்லாம், மனிதனுக்கு மனிதன் சகோதரனென அன்புகொண்டு தழுவ தழுவிக்கொள்ள முயற்சிக்கும் போழ்தெல்லாம், மதம் என்பது குறுக்கே வந்து நிற்பதுதான் மதத்திலுள்ள பெருங்குற்றமாகும். சென்ற பதினைந்து ஆண்டுகட்குள்ளாக, பல நூற்றாண்டுகளாக அடையாத ஓர் பெரும் முன்னேற்றத்தை இவ்விந்தியாவில் நாம் அடைந்துவந்திருக்கின்றோம். இம்முன்னேற்றம் அதி தீவிரப்பட்டு, பண்டைய இந்து மத மூடப்பழக்கங்களின் அடிப்படையானது ஆட்டங் கண்டு விட்டது.

வெற்றி நிச்சயம்.

சீர்திருத்தங்களைக் கண்டு நடுங்கிக் குன்றிய புரோகிதர்கள் பகைமை கொண்டு தம்மைச் சபிப்பார்கள் என்பதை இந்து அறிஞர்கள் அறிவார்கள். எனினும், பொது நலம் பற்றிய தொண்டும், அதற்குரிய மனோதைரியமும் தங்களுக்கு

இறுதியில் வெற்றியளிக்கும் என்பதையும் உறுதியாக எதிர்பார்க்கின்றார்கள். தன் மனச்சாட்சியை அடக்கி ஒடுக்கி வைத்து அற்பப் புகழ்பெறுவதிலும் இவ்வெற்றி இன்பம் அளிக்குமன்றோ?

ஆதலின், இக்காலத்திற்கு ஒவ்வாத பழைய காலத்தீமையாக புரோகிதத்தை ஒழிப்பது நமது கடமை என்று ஏற்படுகின்றது. ஏனெனில் மனத்தோற்றத்தில் உள்ள, பிரத்தியட்சமில்லாத, பல தெய்வங்களின் பேரால் பிறந்தது முதல் இறக்கும் வரையில், இறந்த பிறகும் கூட, இப்புரோகிதர்கள் எண்ணிறந்த சடங்குகளை கற்பித்திருக்கின்றார்கள். இச்சடங்குகளால் கிடைக்கும் பலன்களைக் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் தம்மை நிறுத்திக்கொண்ட இப்புரோகிதர்களே சாப்பிட்டு விடுகின்றனர். நான் மிகவும் குறைபடவே கூறுகின்றேன். ஏனெனில் பிரார்த்தனை என்பதாக லட்சக்கணக்கில் செலவிடப் படுவதையும் நான் கண்ணாரக்கண்டிருக்கின்றேன். இதைக்கண்ட எனக்கு மனம் கொதிக்கின்றதாயினும், இக்கொதிப்பிற்கு நான் இடங்கொடுக்காமல் இருக்கவே முயல்கின்றேன். ஏனெனில், மலைபோல் குங்குமப்பூவும் ஆறுபோல் டசு செய்யும் தெய்வங்களின் பேரால் செலவிடும் இந்துக்களும் சமணர்களும் கோடிக்கணக்கில் ஒரு வேளைச் சோறின்றி இளமையில் நோய்கொண்டு வாடும் நம் சகோதரர்கட்கு தங்கள் பிரார்த்தனைச் செலவைக் கொண்டு ஒரு பரிகாரம் அளித்தல் கூடாதா என்று என் இந்து சமண சகோதரர்களைக் கேட்கின்றேன். தேக வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தக்கவளமில்லாது நலிந்துபோம் எண்ணிறந்த முஸ்லீம்கட்கு, ஆவ்காப்கிதிபிலுள்ள கோடிக்கணக்கான பொருள் கொண்டு ஏன் ஒரு நிவர்த்தி அளித்தல் கூடாது என்று என் முஸ்லீம் சகோரார்களைக் கேட்கின்றேன்.

நமது உபாத்தியாயர்கட்கு ஓர் அறிக்கை.

நாம் பிறப்பினால் அடைந்த மதங்களின் பொருட்டு, நம் குழந்தைகட்கு மீளா நரகக் கதைகளும் தடைபடா ஆனந்தக் கதைகளும் பயிற்றாமல் இருக்குமாறு நமது பள்ளிக்கூட உபாத்தியாயர்கட்குச் செவ்வையாய் அறிவுறுத்த வேண்டும். மீளா நகரத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்காக நமது இந்திய இளைஞர்கள் இவ்வுலக வாழ்க்கையில் இனி லஞ்சம் கொடுக்காமலிருக்கட்டும்.

மதங்களின் சக்தி.

இந்து இந்தியாவானது 33 கோடி தேவர்களைக் (33-கோடி இந்துக்களைக்) கொண்டிருந்த காலத்திலும் இந்தியாவைக்காப்பாற்றிக்கொள்ள அதற்குச் சக்தி இல்லாமல் போனதோடு இந்து கோவில்கள், அதிலுள்ள இந்துக் கடவுள்கள் எல்லாம் அன்னிய மதக்காரர்களால் இடிக்கவும் உடைக்கவும் கொள்ளை இடவும் பட்டன.

அவ்வளவு மாத்திரம் தானா?

இந்து இந்தியா ஒழிந்த பிறகு இந்து முஸ்லீம் இந்தியாவாகி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இந்தியா தாய்நாடாக ஆகி இந்துக்கள் கோவில்களும் முஸ்லீம்கள் கோவில்களும் பதினாயிரக்கணக்காக ஏற்பட்ட பிறகும் இந்தியாவைக் காப்பாற்ற இரண்டு மதத்திற்கும் சக்தியில்லாமல் போய், ஒரு சிறிய கிறிஸ்து மத சமூகத்தார் கைக்குப் போய்விட்டது. இரு மத மக்களும் ஒரு சிறு மக்களைக்கொண்ட தேச மத கூட்டத்துக்கு "அடிமைகளாய்" இருக்கிறார்கள்.

இது மாத்திரம் தானா?

மதத்தலைவர் போன்ற கிலாபத்துத்தலைவர் ஆட்சியில் இருந்த துருக்கி தேசமானது உயிருக்கு ஊஞ்சலாடி மதத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை; மதம் அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது; என்ற பகுத்தறிவு வாதியின் ஆதிக்கத்தாலேயே காப்பாற்றப்பட்டது.

தோட்டத்தில் பகுதி கிணறு என்கின்றபடி, ஊரில் பகுதி கிறிஸ்தவர் கோவில்களாய் இருந்து ஜனங்களில் பகுதி பாதிரிகளாய் இருந்த ரஷியதேசம் இன்று நாஸ்திகர்கள் இடம்சிக்கிக் கொண்ட பிரகுதான் வெகு சுகப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

ஆகவே மதங்களின் வலிமைகளைப்பற்றி பரீக்ஷிப்பதற்கு வேறு ஏதோ பரீக்ஷை இருக்கின்றதுபோல் காணப்படுகிறது. அது எதுவாய் இருக்கலாமென்றால்,

எந்த மதக்காரரும் இந்த உலகத்தில் இந்தச்சரீரத்தோடு ஒரு பலனும் அடையமுடியாமல் இந்த உலகத்தையும் இந்தச்

திதி.

இறந்தவர்களுக்குத் திதி கொடுக்க வேண்டுமென்றால் இறந்து போனவர்களின் ஆத்மாவைப்பற்றி 3 விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. இறந்துபோகும் ஜீவனின் ஆத்மா மற்றொரு சரீரத்தைப்பற்றிக்கொண்டுதான் இந்த சரீரத்தை விடுவதாக.

2. இறந்துபோன ஜீவனின் ஆத்மா இறந்த உடன் பிதிர் லோகத்தை அடைந்து அங்கு இருப்பதாக. (பிதிர்களாய் இல்லாத ஆத்மா எங்கிருக்குமோ)

3. இறந்துபோன ஜீவனின் ஆத்மா அதனதன் செய்கைக்குத்தகுந்தபடி மோக்ஷத்திலோ, நரகத்திலோ பலன் அனுபவித்துக்கொண்டிருப்பதாக.

ஆகவே இந்த மூன்று விஷயத்தில் எது நிஜம்? எதை உத்தேசித்துத் திதி கொடுப்பது?

இது தவிர ஆத்மா என்பது கண்ணுக்குத்தெரியாதது என்றும் சரீரம் உருவம் குணம் இல்லாதது என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே, சரீரம் உருவம் குணம் இல்லாததற்கு நாம் பார்ப்பானிடம் கொடுக்கும் அரிசி, பருப்பு, செருப்பு விளக்கமாறு ஆகியவை எப்படிப்போய்ச்சேரும், அவற்றை ஆத்மா எப்படி அனுபவிக்க முடியும்?

சடலத்தையும் விட்ட பிறகு மற்றொரு உலகத்துக்குப் போய் சுதந்திரத்தோடு மோட்சத்தில் இருக்கலாம் என்பதாகும்.

ஆனால் அறிவில்லாத மக்கள் மதங்களைப்பற்றி இந்த உலகத்தில் பயனை எதிர்பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் அதைவிட மூட மக்கள் இந்த உலகத்திலேயே மதத்துக்குப் பயன்உண்டு என்று சமாதானம் சொல்ல வருகிறார்களே அதுதான் அதிசயமாய் இருக்கிறது.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0

அறிஞா பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம்		0 6 0
ஷை II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன மேஸ்லியர் எழுதியது.

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம்		0 4 0

தோழர் அ. ராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிககோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (வெ. ப. நா. பி.)		0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	கைவல்யம் அல்லது கலிக்கியாணம்	0	8	0
	(இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது)			
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம்	0	8	0
8.	ஞானசூரியன்	0	5	0
9.	தர்ம பரிட்சை அல்லது புராண ஆபாசம்	0	3	0
10.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
11.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
12.	ஈ.வெ.ரா சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0	2	0
13.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
14.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
15.	சுயமரியாதைப்பாடல்	0	2	0
16.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
17.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
18.	பெர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
19.	சோஷியலிசம்	0	2	0
20.	போல்ஷ்விக் முறை	0	1	0
21.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	9
22.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிடப்புரட்டு	0	2	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.